# வல்லிக்கண்ணனின் போராட்டங்கள்



இமயப் பதிப்பகம்

சாகித்திய அகாடமி
பரிசு பெற்ற ஆசிரியர்
எழுதிய

# வல்லிக்கண்ணனின்
# ▫▫▫ போராட்டங்கள்

இமயப் பதிப்பகம்
20, பெருமாள் தெற்கு வீதி
நாகப்பட்டினம்—611 001.

□ விலை ரூ. 6-75

□ முதற் பதிப்பு : 1985

□ உரிமை ஆசிரியருக்கு

□ பதிப்பாளர் : புத்தகப்பித்தன்

□ அச்சிட்டோர் :
ஸ்ரீ கோமதி அச்சகம்
41, சூரப்ப முதலி தெரு
திருவல்லிக்கேணி
சென்னை-5

# அந்நாள் நினைவுகள்

1944ல் நண்பர் வல்லிக்கண்ணன் கிராம ஊழியன் ஆசிரியராய் இருந்தபோது நாகப்பட்டிணம் வந்திருந்தார். அப்போது நாகப்பட்டினத்தில் திரு. கிருஷ்ணசாமி என்பவர் சக்தி நாடக சபாவை உருவாக்கினார். அந்த சபா எங்கள் ஊரில் பிறந்து, உருவான கதை வரலாற்றுப் புகழ் வாய்ந்தது. நண்பர் எஸ். டி. சுந்தரம் என்ற நாடக ஆசிரியர் 'கவியின் கனவு' என்ற நாடகத்தை எழுதி சக்தி நாடக சபையில் நூறு நாட்களுக்கு மேல் நடத்தினார். அதைப் பார்க்க வெளியூர் ஜனங்களுக்கு 'ஸ்பெஷல் ட்ரெயின்' விட்டனர். தமிழ் நாட்டின் எல்லா பத்திரிகை ஆசிரியர்களும் வந்து பார்த்து 'ஓகோ' என்று பத்திரிகையில் புகழ்ந்து எழுதினார்கள். அந்த சமயத்தில்தான் வல்லிக்கண்ணனும் வந்திருந்தார். பல எழுத்தாளர்களையும், பத்திரிகை ஆசிரியர்களையும், கலைஞர்களையும் கவிஞர்களையும் தினசரி எனக்கு அறிமுகம் செய்து வைப்பார் நண்பர் எஸ். டி. சுந்தரம்.

அவருடைய விருப்பப்படி எங்கள் ஊர் நாகை வெளிப்பாளையத்தில் என் மதிப்புக்குரிய நண்பர் வே. கோவிந்த ராஜு நடத்தி வந்த பொது நல சங்கம்—தமிழ்க்கழகம் சார்பில் வல்லிக்கண்ணன் அவர்களுக்கு விருந்தொன்று வைத்து அவர் இலக்கிய சொற் பொழிவைக் கேட்டோம். அந்தக் காலத்திலேயே (நாற்பத்தி ஐந்து வருஷத்திற்கு முன்) அவருக்குப் புதுக்கவிதையில்

மோகம். விதவிதமாக எழுதுவார். அவர் எழுதிய 'காப்பி' என்ற வசன கவிதை என்னை பெரிதும் கவர்ந்து விட்டது. நான் அப்போதெல்லாம் காப்பி பித்தனல்ல. இருந்தும் அவர் கவிநயத்தில் நான் லயித்துப் போய்விட்டேன். இப்போதைப் போல் அப்போது இவ்வளவு வாசகர்கள் கிடையாது. பத்திரிகைகளும் இவ்வளவு அதிகமில்லை. இருந்தும் அந்தக் காலத்திலிருந்து இந்தக் காலம் வரை இலக்கியமே தன் உயிர் மூச்சாகக்கொண்டு போராடினார் வல்லிக் கண்ணன். அவருடைய போராட்டங்களைத் தான் நீங்கள் படிக்கப் போகிறீர்களே! அவருடைய "புதுக் கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்" சாகித்ய அகாடமி பரிசைப் பெற்றது. இன்று ஏராளமான புதுக் கவிதைகள் புத்தகங்களாக வெளி வந்துள்ளன. அந்த இளம் வாசகர்களுக்கு புதுக் கவிதையின் தோற்றம் எப்படி என்று வல்லிக்கண்ணன் தந்த சில கவிதைகளை இத்துடன் இணைத்துள்ளேன். புதுக்கவிதை வாசகர்களுக்கு இது உற்சாகம் அளிப்பதாய இருக்குமென்று நம்புகிறேன்.

அன்புள்ள உங்கள்

—**புத்தகப்பித்தன்.**

# வல்லிக்கண்ணனின் போராட்டங்கள்

**முதல் 'அட்வென்ச்சர்'!**

*பத்திரிகை உலகில் முன்னேறுவதற்கும், எழுத்தாளனாக மேலும் வளர்ச்சி பெறுவதற்கும், சென்னை போயாக வேண்டும் என்று நான் முடிவு செய்தேன்.*

*1942ல்.*

*அப்போது நான் திருநெல்வேலியில் இருந்தேன். பிறருடைய நோக்கில், 'வேலை எதுவும் செய்யாமல்.' உறவினர் ஒருவர் பெரிதும் முயன்று எனக்கு வாங்கித் தந்திருந்த சர்க்கார் விவசாய டிமான்ஸ்ட்ரேட்டர் ஆபீஸ் கிளார்க் வேலையை, நான்கு வருட சர்வீசுடன், ராஜிநாமா செய்துவிட்ட 'வீணன்' ஆக!*

*'இவன் எங்கே உருப்படப் போறான்! போயும் போயும் இவனுக்கு ஒரு வேலை வாங்கிக் கொடுத்தேனே!' என்று அந்த உறவினர் அலுத்து வருத்தப் பட்டுக் கொண்டிருந்தார். பல வருடங்கள் வரை.*

சமூக நோக்கில் அவர் வாழ்க்கையில் வெற்றி கண்டவர். சர்க்கார் விவசாய இலாகா டிமான்ஸ்ட். ரேட்டர் ஆக உத்தியோகத்தில் சேர்ந்து, படிப்படியாகப் பதவி உயர்வுகள் பெற்று, மேல் நிலை அடைந்தவர். அவர் எனது போக்கை வேறு எப்படி விமர்சிக்க முடியும்?

அவரும் ராஜவல்லிபுரம்காரர் தான்.

ராஜவல்லிபுரம் திருநெல்வேலி நகரிலிருந்து கிழக்கே ஆறு மைல் தூரத்தில் உள்ள சிற்றூர். அழகான கிராமம். தாமிரவர்ணி ஆறு அதன் தென் திசையில் ஒரு மைல் தள்ளி ஓடுகிறது. ஆற்றின் கரையை ஒட்டி செப்பறை என்ற நடராஜர் திருத்தலம் இருக்கிறது.

ராஜவல்லிபுரத்துக்கு செப்பறையை வைத்து ஒரு பெருமை. அதே போல, தமிழ் அறிஞர் ரா. பி. சேதுப் பிள்ளையும் அந்த ஊர்காரர் என்பதிலும் ஊர்வாசிகளுக்கு ஒரு தனிப் பெருமை உண்டு.

ஆனால் பிள்ளை அவர்களுக்கு ராஜவல்லிபுரத்தின் மீது அவ்வளவாகப் பற்றுதலோ பெருமையோ இருந்ததில்லை. அது வேறு விஷயம்.

ராஜவல்லிபுரம் வாசியான மற்றொரு பெரியவர் இலங்கை போய் 'வீரகேசரி' பத்திரிகையில் வேலை பார்த்துப் பல வருடங்களைப் போக்கி விட்டு 1940 வாக்கில் சொந்த ஊர் வந்து சேர்ந்திருந்தார். உறவினரான அவருக்கும் எனக்கு உபதேசிக்கக் கூடிய உரிமை இருந்தது. உபதேசித்தார்.

'என்ன, பார்த்த வேலையை விட்டு விட்டாயாமே? பத்திரிகைத் துறையிலே சேர்ந்து எழுத்தாளனாகப்

போகலாம் என்று நினைக்கையாக்கும்? அதுல்லாம் உன்னாலே முடியாது. சொக்கலிங்கம் பிள்ளை ஜர்னலிஸ்டிக் ஃபீல்டிலே முன்னேறி, பெரிய மனிதர் ஆகியிருக்கிறார்னா, அவர் கதையே வேறே. அவருக் குள்ள துணிச்சலும் திறமையும் சாதாரணமா மத்த வங்களுக்கு வந்திராது. நீ எழுத்தாளனாகு. நான் வேண்டாம்னு சொல்லலே. ஆனால் எழுத்தாள னாகவே வாழ்ந்து வளரணும்கிறது நல்லது இல்லே. ரொம்ப சிரமமான காரியம். சுதந்திரமா இருக் கணும்னு ஆசைப்பட்டா, சொந்தமா ஒரு பிசினஸ் தொடங்கு. எனி பிசினஸ். சிறு கடை வையி. ஒரு பெட்டிக் கடையாக் கூட இருக்கலாம். அது முக்கிய மில்லே. ஃபர்ஸ்ட் என்டர் இன்ட்டு பிசினஸ். பணம் கிடைக்கிறதுக்கு அது உதவும். அதிலே இருந் துக்கிட்டே எழுது. உனக்கு நல்லதுக்குத் தான் சொல் கிறேன்' என்று அவர் அறிவித்தார்.

பொதுவாக, எனக்கு நல்லது என்று மற்றவர்கள் கூறுகிற எதையும் நான் ஏற்றுக் கொள்ள விரும்புவ தில்லை. எனவே அந்தப் பெரியவரின் பொன் மொழி களையும் நான் பொருட் படுத்தவில்லை.

மேலும், சேதுப்பிள்ளையையோ, சொக்கலிங்கம் பிள்ளையையோ நான் என் முன்னோடிகளாக, அல்லது வழி காட்டிகளாகக் கொள்ளவும் இல்லை.

புதுமைப்பித்தன் மாதிரி, ந. பிச்சமூர்த்தி மாதிரி, கு. ப. ராஜகோபாலன் மாதிரி—அதாவது 'மணிக் கொடி எழுத்தாளர்கள்' போல—நானும் சிறுகதை எழுத்தாளனாக வளர வேண்டும் என்று விரும் பினேன்.

1939 முதலே எனது எழுத்துக்கள் பல பத்திரிகைகளிலும் பிரசுரமாகிக் கொண்டிருந்தது. என் கதை முதன் முதலாக அச்சில் வந்தது 'பிரசண்ட விகடன்' பத்திரிகையில்தான்.

'பிரசண்ட விகடன்' (மாதம் இருமுறை) ஆரம்ப எழுத்தாளர்களுக்கு நல்ல பயிற்சித் தளமாக அமைந்திருந்தது, அந்நாட்களில். அதன் ஆசிரியராகப் பணியாற்றிய நாரணதுரைக்கண்ணன், 'இன்னார் இனியர் என்று பாராது', எழுதும் ஆர்வம் கொண்டு கதை எழுதத் தொடங்கிய இளைஞர்கள் பலருக்கும், ஊக்கம் அளித்து வந்தார். பிற்காலத்தில் பெயர் பெற்ற 'பெரிய எழுத்தாளர்'கள் பலரது ஆரம்பகாலக் கதைகள் 'பிரசண்ட விகடன்' இதழ்களில் இடம் பெற்றுள்ளன.

1930களிலும், 40களின் ஆரம்ப வருடங்களிலும், தேசிய உணர்ச்சியோடு விடுதலை முழக்கம் செய்யும் வேகமான எழுத்துக்களை வெளியிடும் பத்திரிகைகள் பல தோன்றி, நடந்து, மறைந்து கொண்டிருந்தன. லோக சக்தி, பாரத சக்தி என்ற பத்திரிகைகள் அப்படிப்பட்டவை.

அவற்றில் நான் கதைகளும், உணர்ச்சிகரமான கட்டுரைகளும் பாடல்களும் நிறையவே எழுதினேன். பலரது கவனத்தையும் அவை ஈர்த்தன.

அந்த சந்தர்ப்பத்தில் தான் எனக்கு ஒரு புனை பெயர் தேவை என உணர்ந்தேன். அதுவரை ரா.சு. கிருஷ்ணஸ்வாமி என்றும், ரா.சு.கி. என்றும் தான் எழுதிக் கொண்டிருந்தேன்.

கவி பாரதியார் தன் நண்பர் குவளையூர் கிருஷ்ணமாச்சாரி என்ற பெயரை குவளைக்கண்ணன்

என மாற்றியிருந்தது என் மனசில் பதிந்திருந்தது. அதே போல, ராஜவல்லிபுரத்தில் உள்ள வல்லியையும் கிருஷ்ணஸ்வாமி என்பதை கண்ணன் என மாற்றி அதையும்இணைத்து, வல்லிக்கண்ணன் என்று எனக்கு நானே பெயர் சூட்டிக் கொண்டேன்.

1942க்கு முன்னரே இந்தப் பெயர் பிரபலமாகி விட்டது.

நான் அப்போது எழுதி வந்த உருவகக் கதைகள் 'கலைமகள்' பத்திரிகையில் எடுப்பாக வெளிவந்தன. அவை இலக்கியவாதிகளின் பாராட்டுக்களைப் பெற்றிருந்தன.

காரைக்குடியிலிருந்து 'இந்திரா' என்றொரு பத்திரிகை வந்து கொண்டிருந்தது. அது 1941ல் சிறு கதைப் போட்டி ஒன்றை நடத்தியது. அதில் 'தெருக் கூத்து' என்ற எனது கதை முதல் பரிசு பெற்றது. பி.வி. அகிலாண்டம் (அகிலன்) கதை இரண்டாவது பரிசு பெற்றது.

ப.நீலகண்டன் 'இந்திரா'வின் ஆசிரியராக இருந்தார். இவர் பின்னர் நாடக ஆசிரியர் ஆகி, சினிமாத் துறையில் புகுந்து, வளர்ந்து, சினிமா டைரக்டர் ஆகவும், சொந்தப் படம் தயாரிப்பவராகவும் பரிணாமம் பெற்றது தனி வரலாறு.

'லோகசக்தி' யுடன் தொடர்பு கொண்டிருந்த சக்திதாசன் சுப்பிரமணியன், திரு.வி. கலியாணசுந்தர முதலியாரின் 'நவசக்தி' பத்திரிகையில் ஆசிரியர் குழுவில் அங்கம் வகித்தார். கே. ராமநாதனும் அதன் உதவி ஆசிரியராக இருந்தார். பிறகு அவர் இலங்கை சென்றார்.

1939 இறுதியில், 'லோகசக்தி' சார்பில் சக்தி தாசன் தென்ஜில்லாக்களில் சுற்றுப் பயணம் செய்த போது, ராமநாதபுரம் ஜில்லா பரமக்குடிக்கும் வந்தார். அப்போது நான் அங்கே குமாஸ்தாவாகப் பணிபுரிந்து கொண்டிருந்தேன்.

நான் சந்தித்த முதல் சென்னைப் பத்திரிகை ஆசிரியர் சக்திதாசன் சுப்பிரமணியன்தான். அவர் உற்சாகத்தோடும் உணர்ச்சி வேகத்தோடும் இருந்தார். சென்னை நகர வாழ்க்கைப்பற்றியும், பத்திரிகைகள் மற்றும் பத்திரிகைக்காரர்கள் குறித்தும் நிறையவே சொன்னார். நான் சென்னை சேர்ந்தால் பத்திரிகைத் துறையில் வளர்ச்சி பெற வாய்ப்புகள் கிட்டும் என்றும் அவர் பேச்சோடு பேச்சாகச் சொல்லி வைத்தார்.

பரமக்குடியில் இரண்டு வருடங்கள் வசித்த பிறகு உத்தியோக ரீதியில் நான் திருநெல்வேலி ஜில்லா ஸ்ரீவைகுண்டம் ஊருக்கு மாற்றப்பட்டேன்.

பரமக்குடி ஆபீஸ் சரியான சோம்பல் நிலையமாக இருந்தது. பெரும்பாலான காலங்களில் அங்கே மேலதிகாரியே இருக்கமாட்டார். அந்தத் தனிமைச் சூழ்நிலை எனக்கு மிக வசதியாக உதவியது. படிப்பதற்கும் எழுதுவதற்கும்.

ஸ்ரீவைகுண்டம் ஆபீசிலும் வேலை அதிகம் இருந்ததில்லை. ஆனால் அங்கிருந்த ஆபீசர் தொல்லை தரும் டைப் ஆக இருந்தார். அவர் தந்த தொந்தரவுகளை சகித்துக் கொண்டு அங்கும் இரண்டு வருட காலம் குமாஸ்தாவாக நான் பணி புரிந்தது பெரிய காரியம்தான்.

சக்திதாசன் 'நவசக்தி'யில் அவ்வப்போது என்னைப் பற்றி உற்சாகமாக எழுதிக் கொண்டிருந்தார். 'வட்டத் துளையில் சதுர மூளை—A square peg in a round hole—என்பது போல அவர் தனக்குப் பொருத்தம் இல்லாத இடத்தில் பணி புரிந்துகொண்டிருக்கிறார்' என்றும் அவர் எழுதி வைத்தார்.

இதனால் எல்லாம் நான் சர்க்கார் ஆபீஸ் குமாஸ்தா வேலையை உதறிவிட்டு, படிப்பிலும் எழுதுவதிலும் தீவிரமாக ஈடுபட்டேன்.

1941ல் சக்திதாசன், திரு. வி. க. விடமிருந்து 'நவசக்தி' வார இதழை ஏற்று, தனது சொந்தப் பொறுப்பில் பத்திரிகை நடத்த முற்பட்டார். அதை இலக்கிய மாத இதழாக மாற்றி அமைத்தார். அதிலும் மாதம் தோறும் என் எழுத்துக்கள் பிரசுரமாயின.

இரண்டாவது உலக மகா யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலம். சென்னை நகரில் வசித்தவர்களில் பெரும்பாலர் வெளியூர்களுக்குச் சென்றுகொண்டிருந்த சமயம். பத்திரிகை அலுவலகங்களில் சில கூட கோயம்புத்தூர், மதுரை, காரைக்குடி என்று இடம் பெயர்ந்திருந்தன.

அப்போது சக்திதாசன்,

**'ஒண்டியண்டி குண்டு வீசி**
**உயிர்பறித்த போதினும்**
**அச்சமில்லை அச்சமில்லை**
**அச்சமென்ப தில்லையே!'**

நான் சென்னையிலேயேதான் இருப்பேன். நவசக்தியும் சென்னையிலிருந்துதான் வெளிவரும். சந்தர்ப்

பம் வருகிறபோது நான் உங்களையும் இங்கே அழைத்துக் கொள்வேன்' என்று எனக்கு எழுதினார்.

நான் வெகு சீக்கிரமாகவே வீட்டை விட்டு வெளியேற வேண்டும் என்று ஆசைப்பட்டேன். வீட்டில் எனக்குக் குறை எதுவும் இருந்ததில்லை. ஆனாலும், 'வேலையை விட்டுவிட்டு, வெட்டித்தன மாகக் கண்ட கண்ட புத்தகங்களை படித்தும், வெள்ளைத் தாள்களை கரியாக்கிக் கொண்டும்' வீட்டுக்குப் பாரமாக இருப்பது சரிப்பட்டு வராது என்று என் மனம் உறுத்தியவாறு இருந்தது.

'பார்த்த வேலையை விட்டுப் போட்டு இப்படி இருக்கானே! இவன் என்ன செய்யப் போறானாம்?' என்று என் அம்மா குறை கூறிப் புலம்புவது உண்டு. ஆனால், என் அண்ணா அசோகன் (ரா. சு. கோமதி நாயகம்) எனது விருப்பப்படி நான் படித்துக் கொண்டும் எழுதிக் கொண்டும் இருப்பதற்கு உதவியே செய்தார். புத்தகங்களும் பத்திரிகைகளும் கொண்டு தந்தார். அப்போது திருநெல்வேலி டவுன் மெடிகல் ஸ்டோரில் அவர் வேலை பார்த்து வந்தார்.

நான் அதிகம் படிக்க ஆசைப்பட்டேன். பள்ளிக் கூடத்தில் நான் படித்தது எஸ். எஸ். எல். சி. முடிய மேல் படிப்புக்கு வசதி இல்லாததால் காலேஜில் அடி எடுத்து வைக்கவில்லை.

கல்விப் பயிற்சிக்கும், ஒழுக்கத்துக்கும் கட்டுப் பாட்டுக்கும் சிறந்த கல்வி நிறுவனம் எனப் பெயர் பெற்றிருந்தபாளையங்கோட்டைசெயின்ட்சேவியர்ஸ் ஹைஸ்கூலில்தான் நான் 5-ம் வகுப்பு முதல் எஸ். எஸ். எல். சி. முடியப் பயின்றேன். 1936 மார்ச் மாதத்துடன் எனது பள்ளிப் படிப்பு முடிந்தது.

அக் கால கட்டத்திலேயே கிடைத்த புத்தகங்களை எல்லாம் படித்துத் தீர்த்தேன். அகப்பட்ட பத்திரிகைகள் பலவற்றையும், அவை பழசோ புதுசோ படித்து ரசித்தேன். ஸ்கூல் லைபிரரியில் அதிகமான புத்தகங்கள் எடுத்து, அவற்றை விடாது படித்துப் பயனடைந்த அந்நாளைய மாணவன் நான் ஒருவனாகத்தான் இருந்திருக்கக் கூடும்!

'ஆனந்த விகடன்' பத்திரிகையை அதன் ஆரம்ப இதழிலிருந்து ஒருவர் பைண்டு செய்து வைத்திருந்தார். பாளையங்கோட்டையில் அவர் எங்கள் பக்கத்து வீட்டுக்காரராகவும் இருந்தார். அவரிடமிருந்து விகடன் தொகுதிகளை இரவல் பெற்றுப் படிக்கக் கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

அந் நாட்களில் வாசகர்களிடையே செல்வாக்கு பெற்றிருந்த வடுவூர் துரைசாமி ஐயங்கார், ஆரணி குப்புசாமி முதலியார், ஜே. ஆர். ரங்கராஜு, வை. மு. கோதைநாயகி அம்மாள் ஆகியோரின் நாவல்களை என் அண்ணாக்களும், அவர்களது நண்பர்களும், வட்டமாக உட்கார்ந்து, ஒருவர் இத்தனை பக்கங்கள் உரக்கப் படிப்பது என்று கணக்கிட்டு, முறை வைத்து வாசிப்பார்கள். அப்படி வாசிப்பதன் மூலம் ஒரு நாவலை விரைவாகப் பலர் படித்து முடித்து விடலாம்; எனவே தொடர்ந்து பல நாவல்களை சீக்கிரம் படிக்க வசதிப்படும் என்ற எண்ணம். பாளையங்கோட்டை நகரசபை நூலகத்தில் நிறையவே நாவல்கள் இருந்தன. அவற்றை அவர்கள் படிக்கையில் நானும் கூடவே இருந்து ரசித்து மகிழ்ந்தேன்.

திருநெல்வேலி டவுன் முனிசிபல் லைபிரரியில் நல்ல ஆங்கிலப் புத்தகங்கள் இருந்தன. பெர்னாட் ஷா புத்தகங்களை என் அண்ணா எடுத்து வருவார். அவற்றைப் படிக்கும் வாய்ப்பு எனக்கும் கிட்டியது.

தி. க. சிவசங்கரன் 1941 ஜூன் மாதம் அறிமுக மானார். புதிய புதிய தமிழ் புத்தகங்களையும், படிக்க வேண்டும் என்று தோன்றுகிற பழைய நூல் களையும் அவர் கொண்டு தந்தார்.

இப்படியாக படிப்பதற்குப் புத்தகங்கள் கிடைத்துக் கொண்டுதான் இருந்தன. என்றாலும் என் மனம் அமைதியுறவில்லை? சென்னைக்குப் போனால் இன்னும் நிறையப் புத்தகங்களை—உலக இலக்கியங்கள்—படிக்க வசதி கிடைக்கும் என்ற எண்ணம் உந்திக் கொண்டே இருந்தது.

வீட்டுக்குச் சுமையாக இருக்கிறேனே என்ற உறுத்தலும் அத்துடன் சேர்ந்தது. ஆகவே, ஒருநாள் அதிகாலையில் நான் வீட்டை விட்டு வெளியேறினேன். யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல். கையில் காசு எதுவும் இல்லாமல், வீட்டிலிருந்து மற்றவர்கள் அனு மதி இல்லாது, யாருக்கும் தெரியாமல் பணம் எடுத்துக் கொண்டால், அது திருடியது போல் ஆகும் என்று மனசாட்சி அறிவுறுத்தியது.

ஒரு தைரியம், ஒரு கற்பனை வேகம், ஒரு லட்சிய வெறி: என் உள்ளத்துக்குத் தனி உறுதி தந்தன. கால்களுக்குத் தனி பலம் சேர்த்தன. படித்திருந்த சில தகவல்கள் கனவுகளை வளர்த்திருந்தன.

ஆங்கில எழுத்தாளன் ஆலிவர் கோல்டு ஸ்மித், பையில் காசு இல்லாமலே, நடந்து நடந்து ஐரோப்பா முழுவதும் பயணம் செய்திருந்தான்... இத்தாலி நாட்

டின் சர்வாதிகாரியாக வளர்ந்திருந்த பெனிட்டோ முசோலினி தனது இளம் பிராயத்தில், சொந்த ஊரிலிருந்து ரோமாபுரிக்கு நடந்தே போனான்; அப்போது அவன் சட்டைப் பையில் ஒரு சில சில்லறைக் காசுகளே இருந்தன... ரஷ்ய எழுத்தாளன் மாக்சிம் கார்க்கி சின்ன வயசில் அகண்ட ரஷ்யா பூராவும் நடந்தே சஞ்சாரம் செய்திருக்கிறான்...நான் ஏன் திருநெல்வேலியிலிருந்து சென்னைக்கு நடந்து போகக் கூடாது? நடக்க முடியாதா என்ன? தாராளமாக நடக்கலாம். 400 மைல்கள் தானே! தினம் 30 மைல்கள் நடந்தால் பதினாலாவது நாளில் சென்னையில் இருக்கலாமே!

இவ்விதம் என் மனம் கணக்கிட்டு முடிவு செய்திருந்தது. சாப்பாடு இல்லாமல், தூங்கவும் ஓய்வு எடுக்கவும் வசதி இன்றி, தினசரி முப்பது மைல்கள் நடப்பது சாத்தியம் தானா என்று அந்தக் காலத்தில் நான் எண்ணவில்லை.

ஒரு பையில் இரண்டு வேட்டி சட்டைகள் துண்டுகளோடு, சிறிது அவலும் எடுத்துக் கொண்டு மிடுக்காகக் கிளம்பிவிட்டேன். ஒரு நீண்ட கடிதம் எழுதி, புத்தகப் பெட்டிக்குள் மேலாக வைத்துவிட்டுத்தான்.

அந்தக் கடிதத்தை என் தம்பியோ அண்ணாவோ, உடனடியாகவோ ஒரு சில மணி நேரங்களிலோ பார்க்கவில்லை. பார்த்திருந்தால் சைக்கிளில் வந்து எளிதில் என்னை பிடித்திருக்கக் கூடும்! காலம் எனக்குத் துணை புரிந்தது. அன்று சாயங்காலம்தான் கடிதம் அவர்கள் பார்வையில் பட்டது.

நான் வெகுதூரம் போயிருக்க முடியாது என்று நினைத்து அவர்கள் அருகாமையில் தேடி ஏமாற்றத்துடன் நிறுத்திக் கொண்டார்கள்.

நான் இருட்டுவதற்கு முன் கோவில்பட்டி சேர்ந்திருந்தேன். 35 மைல் தூரம் நடந்து அங்கே ரயில்வே ஸ்டேஷனில் படுத்துத் தூங்கினேன்.

மறுநாள் அதிகாலையில் எழுந்து நடந்தேன் .முன் தினங்களில் மழை பெய்திருந்ததால் வழி நெடுகத் தண்ணீர் வசதி இருந்தது. அவலை சிறிது சிறிது தின்று, தண்ணீர் குடித்து பசியைத் தணித்துக் கொண்டேன்.

இரண்டாம் நாள் முப்பது மைல் நடந்தேன். பாதை ஓரத்தில் ஒரு மடத்தின் திண்ணையில் தூங்கினேன். நள்ளிரவில் விழிப்பு வரவும் எழுந்து நடந்தேன். ஒரு சிற்றூரைக் கடந்த பிறகு, ரோடு ஓரத்தில் ஒரு புளியமரத்தின் கீழே படுத்துஉறங்கினேன். விடியும் முன்னரே எழுந்து நடந்தேன்.

மூன்றாம் நாளும் முப்பது மைல் நடக்க முடிந்தது. அன்று பகல் 12 மணி சுமாருக்கு மதுரை சேர்ந்தேன்.

காலில் செருப்புகள் இல்லாததால், பாதங்களில் வெடிப்பு ஏற்பட்டு வலி இருந்தது. மேற்கொண்டு நடந்து போவது சிரமம் என்று தோன்றியது.

முதலில் காரைக்குடி போக வேண்டும்; அங்கே இருந்த 'இந்திரா' பத்திரிகை அலுவலகத்தில் வேலை கிடைக்குமா என்று முயல வேண்டும் என்பது என் எண்ணம்.

காரைக்குடிக்கு மதுரையிலிருந்து ரயிலில் போகலாம் என்று நினைத்தேன். ரயில் கட்டணம்

மூன்றுரூபாய் என்பதை ரயில்வே ஸ்டேஷனில் ஒட்டப் பட்டிருந்த அறிவிப்பிலிருந்து தெரிந்து கொண்டேன்.

மதுரையில் உறவினர் ஒருவர் தனியாக ஒரு விடுதியில்வசித்து,தொழில் பயிற்சி பெற்றுவந்தார். அவரை அணுகி உதவிகோரினேன். அன்று இரவுஅவருடனேயே தங்கினேன். அவரிடமிருந்து மூன்று ரூபாய் வாங்கிக் கொண்டு, மறுநாள் காலை ரயிலேறி, காரைக்குடி போய் சேர்ந்தேன்.

'இந்திரா' ஆசிரியர் ப. நீலகண்டனை சந்தித்தேன். அவர் அன்புடன் பழகினார். ஆனாலும் உதவி எதுவும் செய்வதற்கில்லை என்று கூறினார்.

கோவையிலிருந்து ஆர். சண்முகசுந்தரம் காரைக்குடி வந்திருந்தார். அவர் 'இந்திரா' ஆபீசிலேயே தங்கியிருந்தார். 'மணிக்கொடி'யிலும் மற்றும் சில பத்திரிகைகளிலும் சிறு கதைகள் எழுதிப் பெயர் பெற்றிருந்தார். அந்த சந்தர்ப்பத்தில் அவருடைய முதலாவது நாவல் 'நாகம்மாள்' வெளி வந்திருக்கவில்லை.

சண்முகசுந்தரம் என்னை 'சக்தி காரியாலய'த்துக்கு அழைத்துப் போய், வை. கோவிந்தன், தி. ஜ. ரங்கநாதன் ஆகியோரிடம் அறிமுகம் செய்தார். எனது கதை 'சக்தி'யிலும் பிரசுரமாகி யிருந்ததால், என் பெயர் அவர்களுக்கு அறிமுகமானதாகவே இருந்தது.

அங்கும் எனக்கு உற்சாகமான வார்த்தைகள் ஏராளமாகக் கிடைத்தன. உருப்படியான உதவி எதுவும் செய்யக் கூடிய நிலையில் 'சக்தி' இருக்கவில்லை.

திருநெல்வேலிக்கே திரும்பிப் போகும்படி எல்லோரும் யோசனை கூறினார்கள்.

இதற்குள் என் அண்ணா அசோகன் என்னைப் பற்றி விசாரித்து, நண்பர்களுக்கும் சில பத்திரிகை அலுவலங்களுக்கும் கடிதங்கள் எழுதியிருந்தார். காரைக்குடியில் ஒரு நண்பருக்கும், 'இந்திரா' ஆபீசுக்கும் கடிதங்கள் வந்தன. நான் வீட்டுக்கு உடனே திரும்பி வர வேண்டும் என்றும், சென்னைக்கு போக விரும்பினால் ரயில் செலவுக்குப் பணம் அனுப்புவதாகவும் அண்ணா அறிவித்திருந்தார்.

வீட்டுக்கே திரும்பிச் செல்வது என்றுதான் தீர்மானித்தேன். அண்ணாவிடமிருந்து பணம் வந்ததும் அவ்விதமே செய்தேன்.

இப்படி முடிந்தது எனது முதலாவது 'அட்வென்ச்சர்'! அப்போது எனக்கு வயது 22.

**இரண்டாவது யாத்திரை**

வீட்டில் எனக்கு இருப்புக் கொள்ளவில்லை. எப்படியாவது ஏதாவது ஒரு பத்திரிகை அலுவலகத்தில் இடம் பெற வேண்டும் என்று விரும்பினேன்.

மதுரையில் சில புதிய பத்திரிகைகள் தோன்றியிருந்தன. சேலத்திலிருந்து 'சண்ட மாருதம்' என்ற பத்திரிகை வந்து கொண்டிருந்தது.

அவை சாதாரணப் பத்திரிகைகளாக வெளிவந்தன. அவற்றின் தரத்தை உயர்த்தி, நல்ல இலக்கியப் பத்திரிகையாக வளர்க்கலாம்; அதற்கு நான் உதவ முடியும் என்று கடிதங்கள் எழுதினேன்.

என் எழுத்துக்களை 'விஷய தானம்' ஆகப் பெற்றுப் பிரசுரிக்க அவை தயாராக இருந்தனவே

தவிர, அலுவலகத்தில் என்னை ஏற்று எனது வளர்ச்சிக்குத் துணை புரிய அவை தயாராக இல்லை. அதற்கான வசதிகள் அவற்றை நடத்தியவர்களிடம் இருந்ததில்லை.

இருப்பினும், சம்பந்தப்பட்டவர்களை நேரில் கண்டு பேசலாம் என்று நான் ஒரு யாத்திரை புறப்பட்டேன், ரயிலில் தான்.

மதுரையில் இரண்டு சிறு பத்திரிகை அலுவலகங்களுக்குப் போனபோது, அவை தூங்கி வழிந்து கொண்டிருந்தன. சரியாக பதில் சொல்வதற்குக் கூட அங்கே எவரும் இருந்ததில்லை.

மலாயாவிலிருந்து தமிழகம் வந்து 'தமிழ் ராஜ்யம்' கனவு கண்டு கொண்டிருந்த சி. பா. ஆதித்தன் 'தமிழன்' என்றொரு வாரப் பத்திரிகையை தொடங்கியிருந்தார். ஜனரஞ்சகமான முறையில் அதை உருவாக்குவதில் தீவிர அக்கறை காட்டி வந்தார் அவர்.

'இந்திரா' விலிருந்து விலகி வந்த கோ. த. சண்முக சுந்தரம் 'மேதாவி' ஆகி அதில் பல புதுமைகளும் புரட்சிகளும் செய்து கொண்டிருந்தார்.

சாதாரணமாக எங்கும் தென்படுகிற பெண்களின் படங்களை அட்டைப்பட சுந்தரிகள் என்று அச்சிட்டது 'தமிழன்' பத்திரிகை. உள்ளே 'நினைத்தாலே சிரிப்பூட்டும் நிகழ்ச்சி' 'மறக்க முடியாத சம்பவம்' போன்ற தலைப்புகளில் துண்டு துணுக்குச் செய்திகளைப் பிரசுரித்தது.

விறுவிறுப்பாகவும், பரபரப்பு ஊட்டும் முறையிலும் எழுதக்கூடிய திறமை பெற்றிருந்த 'மேதாவி'

அனைத்துப் பகுதிகளையும் கவனித்து வந்தார். எனினும், பல ஆசிரியர்கள் இருப்பது போல, 'நி. சி. நி. ஆசிரியர்' 'ம. மு. ச. ஆசிரியர்' என்றெல்லாம் அறிவிப்புகள் வரும்.

அலுவலகத்தில் அநேக மேஜைகள் இருந்தன. ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு ஆசிரியர் என்று கருதும் படியாக. அந்த அந்தப் பகுதிகளுக்கு வரும் கடிதங்கள், கட்டுரைகளையும் சம்பந்தப்பட்ட ஃபைல்களையும் தனித்தனி மேஜைகளில் வைத்திருந்தனர். 'மேதாவி'யே மேஜைக்கு மேஜை போய் அவற்றை கவனித்துக் கொண்டிருந்தார்.

நான் ஆதித்தனைக் கண்டு பேசினேன். சிறிது நேரம் பேசிய பின், மேதாவியை பார்க்கும்படி அவர் தெரிவித்தார்.

'மேதாவி' சண்முகசுந்தரத்தை எனக்கு ஏற்கனவே தெரியும். 'இந்திரா' வில் எனது கதை முதல் பரிசு பெற்றிருந்த சமயம், திருநெல்வேலிக்கு வந்த அவர் வீட்டுக்கு வந்து எங்களோடு ரொம்ப நேரம் பேசிக்கொண்டிருந்தார். பிறகு நான் 'இந்திரா' அலுவலகத்திலும் அவரை சந்தித்தது உண்டு. அவர் என்னிடம் நட்பு உணர்வு கொண்டிருந்தார்.

'நீங்கள் தமிழன் இதழ்களை பார்த்திருப்பீர்களே! இது உங்களுக்கு சரிப்படாது' என்று அவர் சொன்னார்.

மதுரையிலிருந்து நான் திருச்சி போனேன்.

திருச்சி, மட்டக்காரத் தெருவிலிருந்து 'கலா மோகினி' என்ற மறுமலர்ச்சி இலக்கிய இதழ் வந்து கொண்டிருந்தது. வி.ரா. ராஜகோபாலன் (சாலி

வாகனன்) ஆசிரியர். ந.பிச்சமூர்த்தி, கு.ப. ராஜ கோபாலன், பெ. கோ. சுந்தரராஜன் (சிட்டி), க.நா. சுப்ரமண்யம் முதலியவர்கள் அதில் எழுதிக் கொண்டிருந்தார்கள். என்னுடைய கதைகளும் வந்தன.

அதனால் 'கலாமோகினி' ஆசிரியரை அறிமுகம் செய்து கொள்ளவும், நட்பு முறையில் உரையாடவும் அவரைத் தேடிப் போனேன்.

பேச்சோடு பேச்சாக எனது நோக்கத்தை தெரிவித்தேன்.'எனது வளர்ச்சிக்கு, உதவக்கூடிய ஒரு பத்திரிகையை தேடிக் கொண்டிருக்கிறேன். சேலம் போய் சண்டமாருதத்தை பார்க்கலாம் என்று கிளம்பி னேன். நாளை காலை பஸ்ஸில்...'

'போக வேண்டாம்!' என்று தடுத்தார் நண்பர். 'திருநெல்வேலிக்கே திரும்பிப் போங்கள். நீங்கள் பத்திரிகைக்காரர்களை தேடிப் போவதன் மூலம் உங்கள் மதிப்புதான் குறையும். நீங்கள் எதிர் பார்க்கிற பலன் எதுவும் கிடைக்காது' என்றார்.

தொடர்ந்து சொன்னார்: 'வீட்டிலிருந்து வழக்கம் போல் எழுத்து வேலைகளை கவனியுங்கள். வேளை வரும். அப்படி சந்தர்ப்பம் ஏற்படுகிற போது நான் உங்களுக்குக் கடிதம் எழுதுவேன்.'

எனவே, நான் திரும்பவும் தென்திசை சென்றேன்.

**'திருமகள்' அனுபவம்**

புதுக்கோட்டையிலிருந்து 'திருமகள்' என்ற மாதப் பத்திரிகை வந்து கொண்டிருந்தது. ராசி. சிதம்பரம் பப்ளிஷர். இராம. மருதப்பன் ஆசிரியர். சுமாராக இருக்கும்.

லெ. கதிரேசன் செட்டியார் குடிசைத் தொழில் மாதிரி நடத்திய 'அணிகலம்' என்ற மாசிகையும் வந்தது.

இவை தரமான விஷயங்களைத் தர முயன்றன. ஆற்றல் பெற்ற இளைய எழுத்தாளர்களின் எழுத்துக்கள் இவற்றில் மிகுதியாக இடம் பெற்றன. எனது எழுத்துக்கள் நிறையவே பிரசுரமாயின.

திடீரென்று 'திருமக'ளிலிருந்து எனக்கு அழைப்பு வந்தது. ராசி. சிதம்பரம் எழுதியிருந்தார். திருமகளை 'மணிக்கொடி' மாதிரி இலக்கியத்தரமான பத்திரிகையாக வளர்க்கத் திட்டமிட்டிருப்பதாகவும், சாலிவாகனனிடம் யோசனை கேட்டபோது அவர் என்னைப் பற்றி சொன்னதாகவும் எழுதி, நான் உடனே திருமகளில் சேர்ந்து பணி புரிவதற்கு வர வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

வி.ரா.ரா. கடிதமும் வந்தது. திருமகள் மறுமலர்ச்சி இலக்கியப் பத்திரிகையாக வளர வசதிகள் செய்வதில் அதன் பிரசுர கர்த்தர் ஆர்வமாக இருக்கிறார்; நீங்கள் இந்த வாய்ப்பை ஏற்றுக்கொள்ளலாம் என்று யோசனை கூறியிருந்தார்.

அதன்படி 1943 ஜனவரி மாதம் நான் புதுக்கோட்டை போய், திருமகளில் சேர்ந்தேன்.

'திருமகள்' ஆபீஸ் பெரிய மாடியில் வசதியாகத்தான் இருந்தது. அதன் பப்ளிஷரும் உற்சாகமுள்ள இளைஞர்தான். ஆனால் அவர் செயல்களில் அவருடைய வீட்டினருக்கு நம்பிக்கையில்லை. அவரை ஊக்குவிக்கும் எண்ணமும் இருந்ததில்லை.

நான் அங்கே சேர்ந்த சில தினங்களிலேயே இவ் விஷயம் எனக்கு வெட்ட வெளிச்சமாகி விட்டது.

ஜனவரி மாத இதழ் வெளி வருவதற்கே மிகுந்த சிரமங்கள் எதிர்ப்பட்டிருந்தன.

இதற்கிடையில், கோயம்புத்தூரில் நடைபெற்ற 'சினிமா உலகம்' என்ற மாதம் இரு முறைப் பத்திரிகையின் ஆசிரியர் பி. எஸ். செட்டியார், தனது பத்திரிகைக்கு எனது உதவி தேவை என்றும், உடனே கோவை வரும்படியும் எழுதியிருந்தார். அக் கடிதம் திருநெல்வேலி சென்று திரும்பி என்னை வந்தடைந்தது.

'செட்டியாருக்கு ஆசை இருக்கிறது. ஆனாலும் பணம் வீட்டிலிருந்துதான் வரவேண்டும். அதுதான் கஷ்டம். திருமகள் எத்தனை காலம் நடக்குமோ தெரியாது. நடக்கிறவரை நடக்கட்டும் என்று நான் இருக்கிறேன். நீங்கள் பி.எஸ். செட்டியார் அழைப்பை ஏற்று கோவை போவதுதான் உசிதமானது' என்று ஆசிரியர் மருதப்பன் சொன்னார்.

நானும் யோசித்து அவ்விதமே முடிவு செய்தேன். ராசி. சிதம்பரத்திடம் சொல்லி விடை பெற்றேன்.

ஒரு மாத காலம் நான் புதுக்கோட்டையில் 'திருமகள்' ஆபீசில் இருந்தேன். அந்த மாதத்தின் இதழ் அக்கால கட்டத்தில் வெளிவரவில்லை. அங்கே புரூஃப் பார்க்கும் முறையை மருதப்பன் எனக்குக் கற்றுத் தந்தார்.

திருச்சி வந்து, வி. ரா. ரா.வை சந்தித்து உண்மை நிலையை அறிவித்து விட வேண்டும் என்று முயன்றேன். நண்பர் ஊரில் இல்லை. கடிதம் மூலம் தெரிவித்துக் கொள்ளலாம் என்று எண்ணியபடி கோவைக்குப் பயணமானேன்.

**'சினிமா உலகம்'**

தனக்கெனத் தனி வரலாறு கொண்டிருந்தது 'சினிமா உலகம்' பத்திரிகை. தமிழின் முதலாவது சினிமாப் பத்திரிகை என்று அது பெருமையுடன் அறிவிப்பது வழக்கம். பல வருடகாலம் சென்னை யிலிருந்து வெளி வந்த அந்தமாதம் இரு முறை வெளி யீடுயுத்த காலத்தில் கோயம்புத்தூர் சேர்ந்திருந்தது.

'தினமணி'யில் பணிபுரிந்து விட்டு விலகி, 'ஹனுமான்' வார இதழில் சிறிது காலம் சேவை புரிந்து பின் சினிமாத் துறையில் பிரவேசித்து திரைக் கதை வசனம் எழுதுவதில் தனித் திறமை காட்டிப் பிரகாசித்த 'இளங்கோவன்' (ம. க. தணிகாசலம்) அந்தப் பத்திரிகையில் கொஞ்ச காலம் தொண் டாற்றியிருந்தார். கவி ச. து. சு. யோகியாரும் (ச. து. சுப்பிரமணிய யோகி) அதில் பணி செய்திருந் தார். பெயர் பெற்ற வேறு சிலரும் கூட.

'சினிமா உலகம்' வெறும் சினிமாக்கலை தகவல்-விமர்சன இதழாக மட்டுமே நடந்ததில்லை. கதை, கவிதை, ரசமான கட்டுரைகள் வெளியிடும் பத்திரிகை யாகவும் இருந்தது. சினிமா உலகம் சம்பந்தமான விறுவிறுப்பான விஷயங்களையும் விவாதங்களையும் அவ்வப்போது அது வெளியிட்டு வந்தது.

'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தி 'ஆனந்தவிகடன்' இதழ்களில் சினிமாப் படங்கள் பற்றி கிண்டல் கலந்த விமர்சனங்கள் எழுதி வந்தார். அவர் எழுதிய 'தியாக பூமி' நாவல் டைரக்டர் சுப்ரமணியத் தால் படமாக்கப் பட்டது. பாபநாசம் சிவன், எஸ். டி. சுப்புலட்சுமி முதலியவர்கள் நடித்தார்கள்.

அது படமாக வளர்ந்து வந்த போதே, நாவல் தொடர்கதையாக விகடன் பத்திரிகையில் பிரசுரம்

பெற்றது. சினிமா ஸ்டில்கள் பல வாரம் தோறும் கதைக்குரிய படங்களாக அச்சிடப்பட்டன. இதன் மூலம் 'தியாக பூமி' படத்துக்கு விசேஷ விளம்பரம் கிட்டி, தமிழ் நாட்டில் மிகுந்த எதிர்பார்ப்பை உண்டாக்கியிருந்தது.

படம் மக்களுக்கு திருப்தி அளிக்கவில்லை. 'கல்கி'யை தாக்குவதற்கு சரியான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்த பத்திரிகை விமர்சகர்கள் பலரும், 'தியாக பூமி' படத்தையும், அதன் கதை ஆசிரியரை யும் கடுமையாகத் தாக்கி எழுதினார்கள்.

'சினிமா உலகம்' பத்திரிகையும் அதில் முக்கிய பங்கு வகித்தது. கடைசியில், 'தியாக பூமி' பற்றி தமிழில் வெளி வந்த தாக்குதல் விமர்சனங்கள் அனைத்தையும் தொகுத்து விசேஷ வெளியீடு ஒன்றை யும் அது பிரசுரித்தது..

தீபாவளி மலர், பொங்கல் மலர், ஆண்டு மலர் என்று 'சினிமா உலகம்' சிறப்பு வெளியீடுகள் பிரசுர மாவதும் உண்டு. அவை தரமான தயாரிப்புகளாக இருந்தன.

எனவே நான் 'சினிமா உலகம்' அழைப்பை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டேன். 1943 பிப்ரவரி யில் கோயம்புத்தூர் போய் சேர்ந்தேன்.

அதில் சேர்ந்து உழைக்க ஆரம்பித்த சில மாதங் களிலேயே எனக்கு நன்றாக விளங்கி விட்டது 'சினிமா உலகம்' வளர்ச்சியில் ஆர்வம் கொள்ளாத ஒரு பத்திரிகை என்று. அதன் ஆசிரியர் பண்டிதர் பி. எஸ். செட்டியார் பிசினஸ் ரீதியில்தான் பத்திரிகை நடத்திக் கொண்டிருந்தார்.

விளம்பரங்கள் சேகரித்து வெளியிட்டுப் பணம் வசூலிப்பதுதான் அவருடைய முக்கிய நோக்கமாக இருந்தது. அதற்காகவே அவர் அவ்வப்போது விசேஷ மலர்கள் வெளியிட்டார். மலருக்கு விளம்பரங்கள் சேகரிப்பதற்கு என்று அவர் சேலம், சென்னை, திருச்சி எனப் போய் அங்கேயே மாதக் கணக்கில் தங்கி விடுவார். ‘சினிமா உலகம்’ அதில் பணியாற்றிய எழுத்தாளர்களின் திறமை, உற்சாகம், எழுத்து இவற்றின் பயனாக தனித்தன்மை கொண்டு கவனிப்பு பெற்று வந்திருந்தது. அந்த ரீதியில் நானும் என்னால் ஆனதைச் செய்ய முடியுமே தவிர, நான் விரும்பியபடி இலக்கியப் பாதையில் வளர்ச்சி பெறுவதற்கு அந்தப் பத்திரிகை எனக்குத் துணைபுரிய இயலாது என்பதும் புரிந்தது.

பத்திரிகைக்குப் பொருளாதார சிரமம் என்றும் இருந்தது. எனினும், மாதம் தோறும் இரண்டு முறை பத்திரிகை வெளி வருவது தேங்கியது இல்லை. அதற்காக நான் அதிகம் உழைக்க வேண்டியிருந்தது. சம்பளம் என்று மாதாமாதம் மொத்தமாக நான் பணம் வாங்கியதில்லை.

ஆசிரியர் குடும்பம் வசித்த வீட்டின் ஒரு அறை தான் ‘சினிமா உலகம்’ ஆபீஸ். குறுகிய அந்த இடத்தில் ஏகப்பட்ட சாமான்கள்—மேஜை, நாற்காலிகள், புத்தகங்களும் பைண்ட் வால்யூம்களும் அடுக்கப்பட்டிருந்த அலமாரிகள், டைப் மிஷின் முதலியன—நெருக்கடி விளைவித்தபடி காட்சி அளித்தன. அவற்றிடையே நானும் வாழ்ந்தேன். துணை ஆசிரியனாக, டைப்பிஸ்ட் ஆக, கணக்கு எழுதுகிறவனாக, தனிப்பட்ட முறையில் எழுத்தாளன் ஆகவும்.

அருகில் இருந்த ஒரு ஓட்டலில் காபி டிபன் சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்திருந்தார் ஆசிரியர். மாதா மாதம் அவரே கணக்குப்படி ஓட்டலுக்குப் பணம் கொடுத்து விடுவார். எனக்கு செலவுக்கு ஏதேனும் தேவைப்பட்டால் அவரிடம் கேட்டு வாங்கிக் கொள்ளலாம். எப்படியோ, எனக்கு சிரமமோ கவலையோ ஏற்படாத விதத்தில் வாழ்க்கை வண்டி ஓடிக் கொண்டிருந்தது.

பி. எஸ். செட்டியார் ஒரு மூத்த சகோதரனின் அன்பையும் பரிவையும் என்னிடம் கொண்டிருந்தார். நான் வளர்ச்சி பெற வேண்டும் என்று அவர் கருதினார். ஆயினும், தனது பத்திரிகை இருந்தபடியே இருப்பதுதான் லாபகரமானது; அதை வேகமாக வளர வைப்பது நஷ்டத்தையே ஏற்படுத்தும் என அவர் நம்பினார். ஆகவே, குறைந்த அளவில் பத்திரிகை அச்சிடுவதே அவருடைய பிசினஸ் கொள்கையாக இருந்தது. அதில் எனது சுயசிந்தனைகளையும் சுதந்திர எழுத்துக்களையும் என் இஷ்டம் போல் வெளியிடுவதில் அவர் குறுக்கிட்டதில்லை.

எனது உழைப்பையும், சில மாதங்களில் பத்திரிகை பெற்றிருந்த கவனிப்பையும் உணர்ந்து கொண்ட ஆசிரியர் அவராகவே விரும்பி என் பெயரை துணை ஆசிரியர் என்று பத்திரிகையில் அச்சிட ஏற்பாடு செய்தார்.

அது சினிமாப் பத்திரிகைதான். என்றாலும், சினிமா நடிக நடிகையர் பேட்டியோ, வாழ்க்கை வரலாறோ அதில் வந்ததில்லை. பட விமர்சனம் நல்ல முறையில் சுவையாக வெளிவரும். சினிமா வட்டாரச் செய்திகள், விறு விறுப்பான தகவல்கள்,

வம்பளப்புகள் முதலியவற்றை ஆசிரியரே எழுதிக் கொள்வார். சூடாகவும் சுவையாகவும் எழுத வேண்டும் என்றால், விஷயத்தை என்னிடம் சொல்லி, என்னையே எழுதும்படி கேட்டுக் கொள்வார்.

சினிமாப் பத்திரிகையின் துணை ஆசிரியராகப் பணியாற்றிய போதிலும், நான் எந்த சினிமா ஸ்டுடியோவுக்கும் போய் பார்த்ததில்லை. எந்த ஒரு சினிமா நடிகன் அல்லது நடிகையையும் நேரில் கண்டு பேசியதில்லை. எந்தப் படாதிபதியையும் பட டைரக்டரையும் சந்தித்ததுமில்லை. அப்படி எல்லாம் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு எழுந்தது மில்லை.

இலக்கிய உலகில் முன்னேற வேண்டும் எனும் ஆசையே எனக்கு இருந்தது. அதற்காக சென்னை சேர வேண்டும் என்ற நினைப்பு. சினிமாப் பத்திரி கைக்கு ஆறு மாதங்கள் உழைத்தது போதும் என்று பட்டது. இதை ஆசிரியரிடம் அறிவித்தேன்.

அவர் அதிர்ச்சி அடைந்தார். வருத்தப்பட்டார். நீண்ட சொற்பொழிவாற்றினார். எனது எதிர் காலம் பற்றிய அக்கறை அவருக்கு உண்டு என்றும், 'சினிமா உலகம்' பத்திரிகையை இன்னும் சிறந்த கலை இதழாக வளர்க்கலாம் என்றும் சொன்னார்.

"உங்களுக்காக தனியே ஒரு இலக்கியப் பத்திரிகை தொடங்கும் எண்ணம் எனக்கு இருக்கிறது. சென்னை யில் இருந்தபோது கவிஞர் பாரதிதாசன் சிறிது காலம் சினிமா உலகம் பத்திரிகையை கவனித்துக் கொண்டிருந்தார். அவருக்காக நிலா என்ற பெயரில் இலக்கிய இதழ் ஒன்று நடத்தத் திட்டமிட் டிருந்தேன். டிக்ளரேஷன் வாங்கி, அட்டைக்கு உரிய

பிளாக்கு கூடத் தயார் பண்ணியாச்சு. அப்புறம் சரிப் பட்டு வரவில்லை. அவரும் வேறு வழியில் போய் விட்டார். அந்த நிலா இலக்கிய இதழை இப்போது ஆரம்பிக்கலாம். சில மாதங்கள் பொறுத்திருங்கள். கூடவே புத்தகங்களும் வெளியிடுவோம். உங்கள் கதைகளை தொகுத்துப் பிரசுரிப்போம். பொற் காலப் பிரசுரம் என்று பெயர் வைப்போம்...' இம் மாதிரி நிறையவே சொன்னார்.

இவற்றில் எதுவும் நடக்காது என்பது எனக்குத் தெரியும். எனினும் அவர் அன்புக்காக மேலும் சில மாதங்கள் அங்கே தங்கியிருக்க இசைந்தேன்.

'கலா மோகினி', 'கிராம ஊழியன்', மற்றும் இலக்கியப் பத்திரிகைகளுக்குக் கதைகள் எழுதி வந்தேன்.

காலம் ஓடியது. மேலும் மூன்று மாதங்கள் கழிந்தன.

பி. எஸ். செட்டியாரிடமும் அவர் குடும்பத்தாரி டமும் உள்ளதைச் சொல்லி நேரான முறையில் வெளியேற முடியாது என்ற நிலை இருந்ததால், நான் என் அம்மாவையும் சகோதரர்களையும் பார்ப்பதற் காக ராஜவல்லிபுரம் போக வேண்டியிருக்கிறது என்று சொல்லி, அவர்கள் சம்மதத்தைப் பெற்றுக் கொண்டேன்.

வரவேண்டிய இதழுக்குத் தேவையான விஷயங் களைத் தயாரித்து வைத்தேன். டைப் அடிக்க வேண்டியவற்றை இரவில் நெடுநேரம் வரை டைப் செய்து முடித்துவிட்டுப் படுத்தேன்.

திருநெல்வேலிக்குப் போவதற்கு இரவு 1 மணிக்கு ரயில் இருந்தது. அதற்குச் சற்று முந்தி சென்னைப்

பக்கம் போவதற்கு ஒரு பாசஞ்சர் வண்டி இருந்தது. இரவு பதினோரு மணி சுமாருக்கு எழுந்து, யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல், என் பெட்டியை எடுத்துக்கொண்டு வீட்டை விட்டு வெளியேறினேன்.

இருட்டில் ரயில் நிலையம் நோக்கி நடந்தேன்.

அந்த பாசஞ்சர் ஜோலார்பேட்டை வரைதான் போகும். அந்த ஸ்டேஷனுக்கு டிக்கட் வாங்கிக் கொண்டு ரயிலில் ஏறி உட்கார்ந்தேன்.

ரயில் புறப்படும் வரை மனம் திக்திக்கென்று அடித்துக் கொண்டது. வீட்டிலிருந்து செட்டியாரின் மருமகன் கிருஷ்ணன்—ஆசிரியர் ஊரில் இல்லாத சமயங்களில் பத்திரிகை நிர்வாகத்தை கவனித்துக் கொண்டிருந்தவர்—வந்துவிடக் கூடாதே; அவர் வந்து விட்டால் என் திட்டம் நடை பெறாதே என்று தான்.

இதிலும் எனக்குக் காலம் துணை புரிந்தது. அப்படி என்னைத் தேடி அவர் வருவதற்கு முன்னதாகவே ரயில் கிளம்பி விட்டது.

அப்புறம் கிருஷ்ணன் ஸ்டேஷனுக்கு வந்து, திண்டுக்கல் பக்கம் போவதற்காக நின்ற ரயிலில் தேடியதாகவும், என் பெயரைக் கூவி, பெட்டி பெட்டியாகத் தேடி அலுத்ததாகவும் பின்னர் எனக்குத் தெரிய வந்தது.

அது நிகழ்ந்தது 1943 டிசம்பர் ஆரம்பத்தில்.

**சென்னைக்கு வந்தேன்**

ஒரு மாதிரியாக நான் சென்னை வந்து சேர்ந்து விட்டேன்.

அப்படி வருவதற்கு முன்னர் சக்திதாசன் சுப்பிர மணியனுக்குக் கடிதம் எழுதியிருந்தேன். அவரும் வந்து சேரும்படி பதில் எழுதினார்.

'நவசக்தி' ஆபீஸ் மயிலாப்பூர் நடுத் தெருவில் இருந்தது. நான் அங்கே வந்தபோது சக்திதாசன் இலங்கை சென்றிருந்தார்.

தயாராகிக் கொண்டிருந்த 'கிராம ஊழியன்' பொங்கல் மலருக்காக விளம்பரங்களும், கதை கட்டுரைகளும் சேகரம் செய்வதற்காக சென்னை வந்திருந்த திருலோக சீதாராம் நவசக்தி அலுவல கத்தில் தங்கியிருந்தார். என்னை மகிழ்ச்சியுடன் வரவேற்றார்.

சென்னைக்குப் புதியவனான எனக்கு சென்னை நகரத்தின் பல பகுதிகளையும், பல எழுத்தாளர்களை யும், பத்திரிகைக்காரர்களையும் திருலோக சீதாராம் அறிமுகப்படுத்தினார்.

அந் நாட்களில் சென்னையின் வீதிகளில் டிராம் வண்டிகள் ஓடின. நாங்கள் இருவரும் டிராமிலும் ரிக்ஷாவிலும் நடந்தும் நெடுகிலும் சுற்றித் திரிந்தோம். விளம்பரத்துக்காகப் பலப்பல நிறுவனங் களிலும் ஏறி இறங்கினோம்.

புதுமைப்பித்தனை எனக்கு அறிமுகப்படுத்தியது அவர்தான்.

திருலோக சீதாராம் சதா பாரதி பாடல்களைப் பாடிக்கொண்டே வருவார். ஓயாது வெற்றிலை பாக்குப் போடுவார். எழுத்தாளர்கள், பத்திரிகைகள், தனது அனுபவங்கள் பற்றி நிறையவே சொன்னார். இந்த வகையில் அவர் எனக்கு நண்பனாய், வழி காட்டியாய் திகழ்ந்தார்.

'நவசக்தி' பற்றியும் சொன்னார். 'அது ஒழுங்காக வராது. பொருளாதார பலம் இல்லை. பணம் சேகரித்து வருவதற்குத்தான் சக்திதாசன் இலங்கை போயிருக்கிறார். நீங்கள் நவசக்தியில் வேலை பார்ப்பதைவிட கிராம ஊழியனுக்கு வந்து விடுவதே நல்லது. கிராம ஊழியனுக்கு உங்களைப் போல் ஒரு உதவி ஆசிரியர் தேவை என்று வலியுறுத்தினார்.

'என்னை சென்னைக்கு வரும்படி அழைத்தவர் சக்திதாசன்தான். அவர் இலங்கையிலிருந்து வந்த பிறகு அவரிடம் சொல்லிவிட்டு வருவேன். இப்பவே உங்களோடு துறையூருக்கு வருவதற்கில்லை' என்று சொன்னேன்.

இரண்டு வாரங்களுக்குப் பிறகு திருலோகம் திருச்சி சென்றார். போவதற்கு முன்னும், 'யோசித்துச் செய்யுங்கள்' என்று கூறி விடை பெற்றார்.

'நவசக்தி'யின் ஆதாரசக்தியாக இருந்த ராதாமணி அம்மாளும், திரு.வி.க. 'நவசக்தி'யில் பணி புரிந்து விட்டு இலங்கை சென்று தீவிரவாதியாகவும் முற்போக்கு இலக்கியவாதியாகவும் திரும்பியிருந்த கே.ராமநாதனும் பத்திரிகையைக் கொண்டு வருவதில் ஆர்வம் காட்டிய போதிலும், அந்த மாசிகை திணறியவாறிருந்தது. டிசம்பர் மாத இதழ் வெளி வருவதற்கு மிகுந்த காலதாமதம் ஆயிற்று.

என் இஷ்டம் போல் சென்னையை சுற்றிப் பார்ப்பதற்கு எனக்கு நேரம் நிறையவே இருந்தது. நடந்து நடந்தே பல பகுதிகளையும் பார்த்து முடித்தேன்.

'பிரசண்ட விகடன்' ஆபீசுக்குப் போய் நாரண துரைக்கண்ணனை சந்தித்தேன்.

சில நாட்களுக்கு ஒரு முறை புதுமைப்பித்தன் வீட்டுக்குப் போய் அவரை கண்டு பேசினேன்.

எழுத்தாளர் வ.ரா. 'நவசக்தி'யில் கட்டுரைகள் எழுதி வந்தார். அவர் எப்பவாவது ஆபீசுக்கு வந்து போனார்.

வ.ரா. உற்சாகி. உற்சாகமாக உரக்கப் பேசுவார். வாய் விட்டு உரத்துச் சிரிப்பார். அப்படியே அனைவரும் சிரிக்க வேண்டும் என்று கூறுவார். மற்றவர்களை பாராட்டுவதில் அவர் கஞ்சத்தனம் காட்டுவதில்லை. என்னையும் அதிகமாகவே பாராட்டினார்.

நான் எழுத்துலகில் முன்னேறுவதற்காக திருநெல்வேலியிலிருந்து நடந்தே கிளம்பினேன். ஒரு சமயம் என்ற விஷயம் சக்திதாசன் மூலம் அவருக்குத் தெரிந்திருந்தது.

'உமது துணிச்சலை பாராட்டுகிறேன். தமிழுக்காக, தமிழ் இலக்கியத்துக்காக, பாடுபட வேண்டும் என்று வீட்டை விட்டு வெளியேறுவது ரொம்பத் துணிச்சலான செயல்தான். வெற்றி கிட்டுகிற வரை வீட்டின் வசதியான வாழ்க்கைக்கு ஆசைப்பட்டு, வீட்டுக்குத் திரும்பிப் போகாமல் இரும்' என்று உற்சாகப்படுத்தினார் வ.ரா.

சமுதாயத்தைச் சாடுவதிலும், சமூகத்துக்கு 'அதிர்ச்சி வைத்தியம்' அளிக்க வேண்டும் என்று வலியுறுத்துவதிலும் வ.ரா. தீவிரமாக இருந்தார். அதனால், மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்று கவலைப்படாமல், பொதுவாக அதிர்ச்சி தரக்கூடிய எண்ணங்களை அவர் உரத்துப் பேசினார்.

'இன்றைய சமூக நிலையில் வல்லிக்கண்ணன் ஒரு விதவைப் பெண்ணை கூட்டிக் கொண்டு போனால் அது தவறோ குற்றமோ இல்லை. அவளை அவர் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும். அது சமூகத் துக்கு நன்மை செய்வதாகும்.'

'நான் இலங்கையில் ஒரு பெண்ணை கல்யாணம் செய்து கொண்டேன். அது கலப்புத் திருமணம். அது மட்டுமல்ல, சர்வதேச முக்கியத்துவம் பெற்றிருக்க வேண்டிய ஒரு நிகழ்ச்சி. அது இன்ட்டர்நேஷனல் இவன்ட் ஆகக் கொண்டாடப்பட்டிருக்க வேண்டும். ஆனால் தமிழ்நாட்டில் அது கவனிக்கப்படாமலே போய் விட்டது.'

இப்படி எதையாவது வ.ரா. சொல்வார்.

'நான் பலரையும் தாராளமாகப் பாராட்டுகிறேன் என்று குறை கூறுகிறார்கள். அது சரியில்லை என் கிறார்கள். நம்மவர்களுக்கு பாராட்டுவதற்கே மனம் வருவதில்லை. பாராட்ட வேண்டியதை வெளிப்படை யாகப் பாராட்டாமல் இருப்பது தப்பு. அதனால், வளரவேண்டியவர்கள் வளராமல் இருந்து விடுகிறார் கள். முன்னேற வேண்டியவர்கள் முன்னேறாமலே போகிறார்கள். நான் தாராளமாகப் பாராட்டுவேன். அதனால் உற்சாகம் அடைந்து, நிமிர்ந்து நின்று, முன்னே நடப்பதற்கு ஊக்கம் பெறுகிறவன் பெறட்டுமே. தெம்பு இல்லாமல் கீழே விழக்கூடியவன் விழுந்து விட்டுப் போகிறான்! அதுக்காக எடுத்த எடுப்பிலேயே நீ உருப்பட மாட்டே, நீ செய்வது எதுவும் சரியாகயில்லை என்ற தன்மையில் சபிக்க வேண்டுமா என்ன?' என்றும் வ.ரா. சொல்வது வழக்கம்.

'நவசக்தி' ஆபீசில் புத்தகங்கள் அதிகம் இருந்ததில்லை. ஆனாலும், சென்னை யுனிவர்சிட்டி லைபிரரியிலிருந்து புத்தகங்கள் எடுத்து வந்து படிப்பதற்கு சே. ராமநாதன் உதவினார்.

டாஸ்டாவ்ஸ்கி, ஐவான் துர்கனேவ், டால்ஸ்டாய் போன்ற ரஷ்ய எழுத்தாளர்களின் நாவல்களையும், மற்றும் பல தேசச் சிறுகதைத் தொகுப்புகளையும் அப்படி எடுத்து வந்து படிக்க வாய்ப்பு கிட்டியது.

லைபிரரிக்குப் போய் திரும்புகிற போது, திருவல்லிக்கேணி பெல்ஸ் ரோடில் இருந்த அ. கி. ஜயராமனின் 'ஜோதி நிலையம்' போவேன். அவர் என்னிடம் பிரியமாகப் பழகினார். நான் 'சினிமா உலகம்' பத்திரிகையில் பணிபுரிந்த போதே பி. எஸ். செட்டியார் மூலம் அவர் என்னைப் பற்றி அறிந்திருந்தார்.

'ஜோதி நிலையம்' நல்ல நல்ல மறுமலர்ச்சி இலக்கிய நூல்களை வெளியிட்டது. க. நா. சுப்ரமண்யத்தின் முதல் நாவல் 'பசி' அந்தச் சமயம் வெளி வந்திருந்தது. 'சர்வதேசக் கதை மலர்கள்' என்ற வரிசையில் பல்வேறு நாடுகளின் நல்ல சிறுகதைகளை மொழி பெயர்த்துப் பிரசுரித்து வந்தது.

அ. கி. ஜ. அவற்றை எல்லாம் எனக்கு அன்பளிப்பாகவே தந்தார். பிற்காலத்திலும் ஜோதி நிலைய வெளியீடுகளை அன்புடன் அவர் எனக்கு அளித்துக் கொண்டிருந்தார்.

ந. சிதம்பரசுப்ரமண்யம், ப. ராமஸ்வாமி (ப. ரா.), ரா. ஆறுமுகம் போன்ற எழுத்தாளர்களை ஜோதி நிலையத்தில் அறிமுகம் செய்து கொள்ளக் கூடிய சந்தர்ப்பங்களும் வாய்த்தன.

**முக்கிய விஷயம்**

மயிலாப்பூர் அல்லயன்ஸ் கம்பெனி தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு நல்ல சேவை செய்திருக்கிறது. சிறுகதை இயக்கியத்துக்கு அது புரிந்துள்ள பணிக்காக அதன் அதிபர் குப்புஸ்வாமி ஐயரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

'தமிழ் நாட்டுச் சிறு கதைகள்' என்ற வரிசையில் அல்லயன்ஸ் வெளியீடுகளாக அவர் அருமையான கதைத் தொகுதிகளை வெளியிட்டார். வ. வெ. சு. ஐயரின் 'மங்கையர்க்கரசி முதலிய கதைகள்', ராஜாஜி குட்டிக் கதைகள், கு. ப. ராஜகோபாலன் 'கனகாம்பரம் முதலிய கதைகள்', ந. சிதம்பரசுப்ரமண்யனின் 'சக்கரவாகம்', த. நா. குமாரஸ்வாமியின் 'கன்யா குமரி', க. நா. சுப்ரமண்யம் 'அழகி' முதலிய தொகுதிகள் இந்த வரிசையில் பிரசுரமாயின.

தமிழ்ப் பத்திரிகைகளில் வெளி வந்த கதைகளில் சிறப்பானவற்றை தேர்ந்தெடுத்து 'கதைக் கோவை' என்ற தொகுப்பாக அல்லயன்ஸ் கம்பெனி வெளியிட்டது. முதல் கோவையில் 40 கதைகள் இருந்தன.

அடுத்து, அறுபது கதைகளைத் தொகுத்து இரண்டாவது கதைக் கோவை பிரசுரமாயிற்று. அதில் எனது கதையும் இடம் பெற்றிருந்தது.

மூன்றாவது கதைக் கோவையையும் அந்தக் கம்பெனி பிரசுரித்தது. அதன் பிறகு அப்படிப்பட்ட தொகுப்புகள் வெளிவரவில்லை.

அல்லயன்ஸ் கம்பெனியார் தொகுத்து வெளியிட்ட கதைக் கோவைகளில் எல்லாமே சிறந்த கதைகளாக இருந்தன என்று சொல்வதற்கில்லை.

எனினும் அது ஒரு சிறந்த முயற்சி என்பதில் சந்தேகம் இல்லை.

பிற்காலத்தில் தமிழில் அவ்விதமான சிறுகதைத் தொகுப்புகள் தயாரிக்கப்படாமல் போனது பெரிய குறைபாடே ஆகும். ஒவ்வொரு வருடமும் அனைத்துப் பத்திரிகைகளிலும் வெளிவந்த கதைகளில் சிறந்தவற்றை தேர்ந்து தொகுத்து, அந்த வருடத்திய சிறந்த சிறுகதைகள் என்று தொகுப்பு நூல்கள் பிரசுரிக்கப்பட்டிருந்தால் சிறுகதையின் வளர்ச்சியையும் வளத்தையும் புரிந்து கொள்வதற்கு அவை நன்கு உதவும். அமெரிக்காவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் இந்த விதமான கதைத் தொகுப்புகள் நிறையவே வந்துள்ளன.

தமிழ் நாட்டில் நிலவுகிற இந்தக் குறையைப் பற்றி நான் பல சந்தர்ப்பங்களில் குறிப்பிட்டிருக்கிறேன்.

அடிக்கடி நான் பேசியும் எழுதியும் வருகிற இன்னொரு குறைபாட்டையும் இங்கே கூறுவதில் தவறு எதுவும் இல்லை.

தமிழில் பழம்தமிழ் இலக்கியங்கள் கடல்கோளினாலும், தீயினாலும், கறையான் அரிப்பாலும், மக்களின் கவனக் குறைவாலும் அழிந்துபோய் விட்டன; அவை பேரிழப்பு ஆகும் என்று சொல்லப்படுகிறது.

தமிழ் நாட்டினரின் ஆர்வமின்மையும், அக்கறைக் குறைவும், அறியாமையும் தற்காலத் தமிழ் இலக்கியத்திலும் பேரிழப்புகளுக்குக் காரணமாய் அமைந்து வந்திருக்கின்றன. காரணமும் செயலும் இன்னும் நீடிக்கின்றன; தொடர்ந்து வளர்கின்றன.

புதுமைத் தமிழ் இலக்கியத்தில் கடந்த ஐம்பது அறுபது வருடங்களில் உயர்ந்த, சிறப்பான, படைப்பு நூல்கள் பல வந்துள்ளன. அவை ஒரு பதிப்பு மட்டுமே வெளியாயின. மீண்டும் மீண்டும் பதிப்பிடப் பட்டிருக்க வேண்டிய அந்தப் புத்தகங்களின் (முதல் பதிப்பு) பிரதிகள் இப்போது கிடைப்பதுமில்லை.

நாட்டின் நிலைமை இவ்வாறு இருக்கையில் தமிழ் வளமானது, நல்ல வளர்ச்சி பெற்றிருப்பது என்று பெருமை பாராட்டிக் கொண்டிருப்பதில் அர்த்தமு மில்லை; பிரயோசனமும் இல்லை.

நான் 'நவசக்தி'யில் சேர்ந்த சமயம் மயிலாப்பூர் அல்லயன்ஸ் கம்பெனிக்குப் போய் குப்புஸ்வாமி ஐயரைக் கண்டு பேசினேன். அவர் மகிழ்வோடும் பிரியத்துடனும் பழகினார். 'தமிழ் நாட்டுச் சிறு கதைகள்' வரிசையில் எனது கதைகளையும் வெளியிடு வதாகச் சொல்லி, கதைகளை தொகுத்துத் தரும் படி கேட்டார்.

நானும் சில கதைகளை சேர்த்துக் கொடுத்தேன். அவற்றை 'பட்டாசுக் கட்டு' என்ற பெயரில் புத்தக மாக்கலாம் என்று ஐயர் தெரிவித்தார். பட்டியலி லும் அந்தப் பெயரை அச்சிட்டு விளம்பரப்படுத் தினார்.

ஆனாலும், அல்லயன்ஸ் வெளியீடாக என் சிறு கதைத் தொகுப்பு பிரசுரம் பெறவேயில்லை.

**ஊர் மாற்றம்**

சக்திதாசன் இலங்கையிலிருந்து திரும்பி வந்த பின்னரும் 'நவசக்தி'யின் நிலைமை தேறிவிடவில்லை.

மாதம் தோறும் இதழ் வெளியிட இயலாத நிலையே நீடித்தது.

1944 ஜனவரி மாதம் இதழ் வந்தது. பிப்ரவரியில் வரவில்லை.

இதற்குள் துறையூரிலிருந்து திருலோக சீதாராம் பல கடிதங்கள் எழுதி விட்டார். நான் தயங்கிக் கொண்டிருந்ததை உணர்ந்து, பிப்ரவரி இறுதியில் 'கிராம ஊழியன்' பப்ளிஷரான அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார் நேரில் வந்து என்னையும் உடன் அழைத்துக் கொண்டு திரும்பினார்.

நான் போகிறேன் என்று தெரிவித்ததும் சக்திதாசன் வெகுவாக வருத்தப்பட்டார். பத்திரிகையை நன்றாக வளர்ப்பதற்குத் திட்டங்கள் வைத்திருப்பதாகவும், நான் அவரோடு இருந்தால் உதவியாக இருக்கும் என்றும் சொன்னார். மற்றர்வகளும் வருத்தத்துடனேயேதான் எனக்கு விடை கொடுத்தனர்.

நான் அங்கேயே இருந்திருந்தாலும் 'நவசக்தி, திடமாக வளர்ந்திருக்க முடியாதுதான். அது நீடித்து வாழ்ந்திருக்கவுமில்லை.

1944 பிப்ரவரி இறுதியில் நான் சென்னையை நீங்கினேன். 'கிராம ஊழியன்' மறுமலர்ச்சி இலக்கிய இதழில் பணிபுரிவதற்காக நான் துறையூர் வந்து சேர்ந்தேன்.

**கிராம ஊழியன்**

துறையூர் திருச்சி நகரிலிருந்து 28 மைல்களுக்கு அப்பால் உள்ள ஒரு சிற்றூர். அங்கே 'கிராம ஊழியன்' காங்கிரஸ் கட்சியை ஆதரிக்கும் அரசியல் பத்திரிகையாக நடந்து கொண்டிருந்தது. இடைக்

காலத்தில் அரசியல் காரணங்களால் அது நிறுத்தப் பட்டிருந்தது. துறையூர் பூர்ணம் பிள்ளை என்பவர் முதலில் அதை ஆரம்பித்து, ஆசிரியராக இருந்தார். அவர் மரணத்துக்குப் பிறகு திருலோக சீதாராம் அதன் ஆசிரியப் பொறுப்பை ஏற்றிருந்தார். பத்திரி கையின் நிர்வாகப் பொறுப்பு லிமிட்டெட் கம்பெனி வசம் ஒப்புவிக்கப்பட்டது.

கிராம ஊழியன் பிரஸ் லிமிட்டெட்டின் செய லாளராக அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார் பொறுப்பு வகித்தார். அவர் இலக்கிய ஆர்வம் உடை யவர். பாரதியிடம் ஈடுபாடு கொண்டவர். கவிதை எழுதுவதில் அக்கறை காட்டினார்.

1942 முதல் திருச்சியில் நடைபெற்று வந்த 'கலா மோகினி' அவர் கவனத்தைக் கவர்ந்திருந்தது. திருலோக சீதாராம் துணையினால் வி. ரா. ராஜ கோபாலன், ந. பிச்சமூர்த்தி, கு. ப. ரா., சிட்டி ஆகி யோர் நட்பு அவருக்குக் கிட்டியது. 'கலா மோகினி' இலக்கியச் சூழ்நிலையின் தாக்கம் காரணமாக, தாங்களும் ஒரு இலக்கியப் பத்திரிகை நடத்த வேண்டும் என்ற அவா திருலோகத்துக்கும் அ.வெ.ர.கி.க்கும் ஏற்பட்டு வளர்ந்தது.

இரண்டாவது உலக மகாயுத்த காலம். காகிதக் கட்டுப்பாடு அமுலில் இருந்தது. புதிய பத்திரிகைகள் தொடங்குவதற்கு அரசு அனுமதி மறுத்துக் கொண் டிருந்தது.

அதனால் 'கிராம ஊழியன்' பத்திரிகையையே 'கலா மோகினி' மாதிரி மாதம் இருமுறை இலக்கியப் பத்திரிகையாக மாற்றுவது என அவ்விருவரும் தீர் மானித்தனர்.

அச்சமயம் கு ப. ரா. கும்பகோணத்தில் வசித் தார். திருச்சி நண்பர்களின் யோசனையின்படி அவரை 'கிராம ஊழியன்' கௌரவ ஆசிரியராக அவர் கள் ஏற்றுக் கொண்டார்கள்.

கு. ப. ராஜகோபாலன் கௌரவ ஆசிரியராகவும், திருலோக சீதாராம் ஆசிரியராகவும் பொறுப்பு ஏற்று, 'கிராம ஊழியன்' மறுமலர்ச்சி இலக்கிய மாதம் இருமுறைப் பத்திரிகையாக 15-8-1943 முதல் வெளிவரத் தொடங்கியது.

கு. ப. ரா. கும்பகோணத்திலிருந்தே ஒவ்வொரு இதழுக்கும் விஷயங்கள் அனுப்பினார். கு. ப. ரா., கரிச்சான், பரத்வாஜன் என்று பல பெயர்களில் கதை, கட்டுரை, மாவீரன் சிவாஜி மன்னன் வரலாறு, ஓரங்க நாடகம் எல்லாம் எழுதினார். எம். வி. வெங்கட்ராம், தி. ஜானகிராமன், ஆர். நாராயணசுவாமி, ஸ்வாமி நாத ஆத்ரேயன், கி. ரா. கோபாலன், மற்றும் இளைய எழுத்தாளர்கள் சிலரது எழுத்துக்களையும் வாங்கி அனுப்பினார். கோபுலு, சாரதி முதலிய இளம் ஓவியர்களின் சித்திரங்களையும் அனுப்பிக் கொண்டிருந்தார்.

அவருக்கு இருந்த உற்சாகத்தில், தனக்குப் பணம் எதுவும் வேண்டாம் என்று கு. ப. ரா. திருலோக சீதாராமிடம் கூறியிருந்தார். எனினும் ஊழியன் நிறுவனம் அவருக்கு மாதம் ஐம்பது ரூபாய் அனுப்பி வந்தது.

9—வது இதழ் முதல் கு. ப. ராஜகோபாலன் ஆசிரியர் என்றும், திருலோக சீதாராம் நிர்வாக ஆசிரியர் என்றும் பத்திரிகையில் அச்சிடப்பட்டது. கு. ப. ரா. வழக்கம் போல் விஷயங்கள் அனுப்பி

வந்தார். அவருக்கு மாதம் தோறும் நூறு ரூபாய் அனுப்ப நிர்வாகம் முன் வந்தது.

ஊழியனில் எழுதுகிற இளைய எழுத்தாளர்களுக்கு சன்மானம் வாங்கித் தருவதாக கு. ப. ரா. பேச்சோடு பேச்சாகச் சொல்லியிருந்ததாகத் தெரிகிறது. ஆனால், கிராம ஊழியன் யாருக்கும் 'அன்பளிப்பு' வழங்கவில்லை.

கு. ப. ரா. ஆசிரியராக இருந்த காலத்தில் (1944 ஜனவரியில்) கி. ஊழியன் ஒரு 'பொங்கல் மலர்' வெளியிட்டது. பெரிய அளவில்.

அதற்கு விஷயங்களும் விளம்பரங்களும் சேகரிப்பதற்காக சென்னைக்கு வந்த திருலோகத்துடன் கு. ப. ரா. வும் வந்தார். ஆயினும் சில நாட்களில் அவர் கும்பகோணம் திரும்பி விட்டார். நான் சென்னை வந்த போது அவர் அங்கே இல்லை.

நான் துறையூர் சேர்ந்த பிறகு, ஏப்ரல் ஆரம்பத்தில் கு. ப. ரா. துறையூருக்கு ஒரு தடவை வந்தார். கு. ப. ரா. வை நான் பார்த்த முதல் தடவை அது தான். அதுவே கடைசித் தடவையாகவும் முடிந்து விட்டது.

துறையூருக்கு அம்முறை அவர் வந்து போனது கு. ப.ரா. வின் வாழ்க்கையில் ஒரு சோக நிகழ்ச்சியாக அமைந்தது. அவருடைய மென்மையான உள்ளத்தை அது வெகுவாக பாதித்து விட்டது.

கு. ப. ரா. கும்பகோணத்தில் சிரமமான வாழ்க்கையே வாழ்ந்து வந்தார். அந்தச் சந்தர்ப்பத்தில் மொத்தமாகச் சிறிது அளவு நெல் வாங்கி வைத்துக்கொண்டால் ரொம்ப சௌகரியமாக இருக்

கும் என்று அவருக்குத் தோன்றியது. அதற்கு நூறு ரூபாய் வேண்டும். கி. ஊழியனுக்குக் கடிதம் எழுதுவதை விட நேரில் போய் பார்த்துப் பேசுவதே நல்லது: பணம் நிச்சயம் கிடைத்து விடும் என்ற நம்பிக்கை அவருக்கு இருந்தது. புறப்பட்டு வந்தார்.

நூறு ரூபாய் கேட்ட போது, அவருக்கு அது தர மறுக்கப்பட்டது. இது லிமிட்டெட் ஸ்தாபனம்; நினைத்த போது நினைத்த அளவு பணம் கிடைக்காது என்ற தன்மையில் திருலோக சீதாராம் பேசினார்.

இருவருக்குமிடையே பேச்சு வளர்ந்து, கசப்பான வாக்குவாதமாக முற்றியது.

'நீங்கள் என்னை எக்ஸ்ப்ளாயிட் பண்ணுகிறீர்கள்' என்று கு. ப. ரா. வருத்தத்துடன் சொன்னார்.

'மிஸ்டர் கு. ப. ரா! நீங்கள் உங்களை மறந்து பேசுகிறீர்கள். சென்னை பப்ளிஷர்கள் உங்களை எக்ஸ்ப்ளாயிட் பண்ணினார்கள். சென்னை பத்திரிகைக்காரர்கள் உங்களை எக்ஸ்ப்ளாயிட் பண்ணினார்கள். அவர்களை எதிர்க்க உங்களுக்கு தைரியமில்லை. கும்பகோணத்துக்கு வந்து சும்மா இருந்தீர்கள். கிராம ஊழியன் உங்களுக்கு தனி அந்தஸ்து அளித்தது. உங்களை கௌரவ ஆசிரியர் ஆக்கினோம். பிறகு ஆசிரியர் என்றே போட்டோம். எனக்குப் பணமே வேண்டாம், நான் எழுதுகிறவை எல்லாம் பத்திரிகையில் வந்தால் சரிதான் என்று நீங்கள் சொன்னீர்கள். அது சரியல்ல என்று நாங்களாகவே முப்பது ரூபாய் தர எண்ணி, அதை ஐம்பதாக்கி மாதம் தோறும் அனுப்பினோம். ஆசிரியர் என்று போட்ட பிறகு நூறு ரூபாய் அனுப்ப முன் வந்தோம். அதை

எல்லாம் மறந்து விட்டு, நாங்கள் உங்களை எக்ஸ்ப்ளாயிட் பண்ணுவதாகச் சொல்கிறீர்கள். உண்மையில் நாங்கள் உங்களை எக்ஸ்ப்ளாயிட் பண்ணத் தொடங்கினால், உங்களால் வாழ முடியாது. நீங்கள் உயிரோடு இருக்க மாட்டீர்கள்!' என்று சீதாராம் கடுமையாகப் பேசினார்.

'நான் நினைத்தால் கிராம ஊழியனை வாழ விடாமல் செய்ய முடியும். ஊழியன் நின்று போகும்' என்றார் கு. ப. ரா.

'அது உம்மால் முடியாது, கு ப.ரா. நான் நினைத்தால் கிராம ஊழியன் ஸ்தாபனத்தையே மூடி விட முடியும்' என்று சீதாராம் சவாலிட்டார்.

இருவருக்கு மிடையே மவுனமாக இருந்தார் அ. வெ. ர. கி.

முடிவு என்ன? கு. ப. ரா.வின் நம்பிக்கை விழுந்து விட்டது. அவருடைய மென்மையான உள்ளம் வெகுவாக பாதிக்கப்பட்டது. அன்று இரவே அவர் திருச்சி போய் விட்டார்.

தனிப்பட்ட முறையில் அ. வெ. ர. கி. ரெட்டியார் கு. ப. ரா.வுக்கு நூறு ரூபாய் உதவியிருந்திருக்கலாம். அவருக்கு அது பெரிதல்ல. எனினும் அவர் உதவ முன் வரவில்லை. தனிப்பட்ட காரணங்கள் இருக்கலாம்.

மறுநாள் அவர் என்னிடம் சொன்னார்: 'இரண்டு பேரும் என்னை கேணையன்னு எண்ணிப் போட்டாங்க. பணம் போட்டு ஸ்தாபனத்தை நடத்துகிறவனை அவங்க ஒரு பொருட்டாகவே நினைக்கலே. நான் நினைத்தால் ஊழியனை சாகடிச்சிருவேன்னு

கு. ப. ரா. சொல்றாரு. அது உம்மாலே முடியாது. நான் மனசு வச்சா இந்த ஸ்தாபனத்தையே மூடிப் போடுவேன்னு சீதாராம் சொல்றாரு. எப்படி இருக்கு பார்த்தீர்களா!' என்று.

இரண்டு நாட்களுக்குப் பிறகு துறையூர் வந்த ந. பிச்சமூர்த்தி சொன்னார்: 'திருச்சி ரேடியோ ஸ்டேஷனில் கு. ப. ரா. வை பார்த்தேன். துறையூருக்குப் போன விஷயம் என்ன ஆச்சு என்றேன். ரொம்ப வருத்தமாகப் பேசினான். ஒரு பத்திரிகைக்கு இரண்டு ஆசிரியர்கள் இருப்பது சரியல்ல; அதனால் விபரீதங்களே விளையும்னு புரிந்து கொண்டேன் என்று சொன்னான்...'

மனம் முறிந்து கும்பகோணம் சேர்ந்த கு. ப. ரா. வின் உடல் நிலை பாதிக்கப்பட்டது. அவர் நோய் வாய்ப்பட்டார். தேறவேயில்லை. சில தினங்களிலேயே எதிர்பாராத சேதி வந்தது. 1944 ஏப்ரல் இறுதியில் கு. ப. ரா. இறந்து போனார்.

உடனே திருலோக சீதாராமும் ரெட்டியாரும் பணத்தை அள்ளிக்கொண்டு அவசரமாகக் கும்பகோணம் சென்றார்கள்.

திரும்பி வந்ததும், கு. ப. ரா. வின் அந்திமச் சடங்குகள் சிறப்பாக நடந்து முடிந்தன என்று சொன்னார்கள். கு. ப. ரா. பேரில் நிதி திரட்டி அவர் குடும்பத்துக்கு உதவத் திட்டமிட்டிருப்பதாக அறிவித்தார்கள். அது சம்பந்தமான அறிக்கைகள் அச்சிடப்பட்டன. கி. ஊழியனின் 18வது இதழ் கு. ப. ரா. நினைவு மலராக வந்தது.

சென்னை 'கலைமகள்' பத்திரிகையும் கு. ப. ரா. நினைவு நிதி திரட்டியது.

—கு. ப. ரா. வின் மாமனார் கோபமாகப் பேசினார், துக்க வீட்டில். கு. ப. ரா.,வின் எழுத்துக்களை, அச்சில் வராதவற்றை எல்லாம், புத்தகங்களாக வெளியிடலாம் என்று அ. கி. ஐயராமன் கேட்டார். மாமனார் சுந்தரம் ஐயருக்கு ஆத்திரம். தன் மகளுக்கும் பேரக்குழந்தைகளுக்கும் கு. ப. ரா. எதுவுமே விட்டுப் போகலையேன்னு. அவங்களை நல்ல படியா வாழவைக்கவுமில்லையே என்றும் கோபம். பெரிய எழுத்தாளன், என்ன பெரிய எழுத்தாளன்! கட்டின பெண்டாட்டியையும் குடும்பத்தையும் காப்பாத்த முடியாதவன் என்ன பேரு பெற்று என்னத்துக்கு? அவன் என்ன எழுதி என்ன பிரயோஜனம்? இவர் எழுதியதை எல்லாம் நான் யாருக்கும் தரமுடியாது. யாரும் அவற்றை புஸ்தகமாய் போட வேண்டியதில்லை. அவற்றை எல்லாம் நான் தீயிலே போட்டுக் கொளுத்தினாலும் கொளுத்துவேனே தவிர, ஒருத்தர்கிட்டேயும்கொடுக்கமாட்டேன்னு கத்தினார்......

இதை ரெட்டியார் என்னிடம் தெரிவித்தார்.

மனித உறவுகள், நட்புகளின் போலித்தன்மைகள் என் உள்ளத்தில் தழும்புகள் பதித்தன. அங்கே மண்டிய கசப்பை மேலும் கணத்துக் கவிய வைத்தன.

'கிராம ஊழியன்' காலத்தில் ந. பிச்சமூர்த்தி துறையூருக்கு அருகில் உள்ள செட்டிகுளம் கிராமத்தில் தேவஸ்தான அதிகாரியாக (Endowment Officer) பணியாற்றிக் கொண்டிருந்தார்.

அந்த உத்தியோகம் தொடர்பாக அவர் அடிக்கடி துறையூர் வரவேண்டியிருந்தது. அவர் நட்பு உணர்வோடும் பிரியத்துடனும் என்னோடு பழகினார்.

ஊழியனில் அவருடைய 'யாப்பில்லாக் கவிதை' களும் 'மன நிழல்' கட்டுரைகளும் தொடர்ந்து வந்து கொண்டிருந்தன.

கு. ப. ரா. வின் மரணத்துக்குப் பிறகு, கும்ப கோணம் எழுத்தாளர்கள் ஊழியனுடன் ஒத்துழைக்க விரும்பவில்லை. ஊழியனில் எழுதுகிறவர்களுக்கு சன்மானம் வாங்கித் தருவதாக கு. ப. ரா. சொல்லி யிருந்தது போல், தங்களுக்கு அன்பளிப்பு எதுவும் கிடைக்கவில்லையே என்ற மனக்குறை அவர்களுக்கு இருந்திருக்கும். இதுவரை கு. ப. ரா. வுக்காக எழுதி னோம்; இனியும் எதற்காக ஊழியனுக்கு எழுத வேண்டும் என்று அவர்கள் எண்ணியிருக்கலாம். ஏனோ, சிறிது சிறிதாக அவர்கள் ஒதுங்கிக் கொண்டார்கள்.

எனினும், எம். வி. வெங்கட்ராம் தொடர்ந்து எழுதி உதவினார். கதைகள், விக்ரகவிநாசன் என்ற பெயரில் கவிதைகள், மற்றும் சரத்சந்திரர் பெண் களையும் பெண்மையையும் பற்றி, சமூகத்தில் பெண் கள் நிலை குறித்து எழுதிய நீண்ட கட்டுரையின் மொழிபெயர்ப்பு எல்லாம் தந்தார்.

தபாலில் வரும் கதை கட்டுரைகள் தரமாக இருப்ப தில்லை. நல்ல விஷயங்கள் அபூர்வமாகவே வந்து சேரும். பத்திரிகை மாதம் இருமுறை வெளி வந்தாக வேண்டும். நல்ல விஷயங்களைக் கொண்டிருக்கவும் வேண்டும். ஆகவே, நான் நிறையவே எழுதினேன்.

கவிதைகள் திருலோக சீதாராம் (மந்த ஹாசன்), கலைவாணன், வித்துவான் வி. துரைசுவாமி, மற்றும் இலங்கைக் கவிஞர்கள் எழுதினார்கள். அ. வெ. ர. கி. யும் கண்ணன் என்ற பெயரில் எழுதினார்.

கதைகள், கட்டுரைகளுக்குத்தான் தட்டுப்பாடு. நான் வெவ்வேறு விதமாக, அநேக புனை பெயர்களில் எழுதினேன். வசன கவிதைகளும் எழுதினேன்.

ரெட்டியார் வெவ்வேறு பெயர்களில் கட்டுரைகள் எழுதினார். திருச்சியிலிருந்து சிட்டியும் எழுதி அனுப்பினார்.

'கிராம ஊழியன்' ஆண்டு மலர் தயாரிக்க வேண்டும் என்று சீதாராம் திட்டமிட்டார்.

கு.ப.ரா. காலத்தில் தயாரான மலர் சாதாரணமாக இருந்தது. ஆண்டு மலர் சிறந்த தயாரிப்பாக—1930களில் வெளிவந்த தினமணி ஆண்டு மலர் போல—அமைய வேண்டும் என்று நான் ஆசைப்பட்டேன்.

தினமணி மலர்கள் சிறந்த இலக்கியப் பொக்கிஷங்களாக அமைவது வழக்கம். அவற்றை புதுமைப் பித்தன் உருவாக்கினார். 1934ல் நீண்ட வடிவத்தில் 'தினமணி பாரதி மலர்' என்ற பெயரில் ஒரு மலர் வந்தது. 1937 முதல், வழக்கமான தீபாவளி மலர் சைஸில், தினமணி மலர் உருவாயிற்று. கதைகள் கட்டுரைகள் மிகச் சிறப்பாக இருக்கும்.

அவற்றில் 1937-ம் வருட மலர் மிகவும் சிறப்பான இலக்கிய மலர் ஆகும். அதில் புதுமைப்பித்தன் கதை 'நினைவுப் பாதை', மௌனியின் 'எங்கிருந்தோ வந்தான்', ந. பிச்சமூர்த்தியின் கவிதை 'கிளிக்கூண்டு,' இளங்கோவன் கட்டுரை 'சாவே வா', ச.து.சு. யோகியார் கவிதை 'அகல்யா', 'இலக்கியச் சோலை' என்ற தலைப்பில் ராஜாமணி உரையாடலாக க. நா. சுப்ரமண்யம் எழுதிய இலக்கிய விஷயம், சிட்டியின் 'நான் பிரபலஸ்தனாக இருந்தால்...' என்ற

நகைச்சுவைக் கட்டுரை—இவை சிறப்பான படைப்பு களாக விளங்கின. மற்றும் பல நல்ல கதைகள் கட்டுரைகளும் இருந்தன. இவற்றை அணி செய்யும் அழகிய சித்திரங்களும், வேறு ஓவியங்களும் அம்மலரின் மதிப்பை உயர்த்தின.

அதுபோல் சிறப்பான முறையில் 'கிராம ஊழியன்' மலர் இருக்க வேண்டும் என்று விரும்பி னேன். ஓவியங்கள், கதைகள் கட்டுரைகளுக்கு எடுப் பான படங்கள் இணைப்பது சாத்தியமில்லை; பொருள்நிலை இடம் தராது. அந்தக் குறையை விஷயச் சிறப்பின் மூலம் ஈடு செய்ய வேண்டும் என்று எண்ணி, எல்லோருக்கும் கடிதங்கள் அனுப்பினோம்.

தமிழ் பத்திரிகைகள் இலங்கை எழுத்தாளர் களுக்கு உரிய கவனிப்பு தருவதில்லை, பொதுவாக. 'கிராம ஊழியன்' தமிழ் நாட்டுக்கும் இலங்கைக்கு மிடையே ஒரு இலக்கியப் பாலம் ஆகச் செயல்பட்டது. ஆண்டு மலரிலும் இலங்கைத் தமிழ் எழுத்தாளர் களுக்கு முக்கியத்துவம் கொடுக்க முடிவு செய்தோம்.

எங்கள் முயற்சி வெற்றி தந்தது. ஆண்டு மலர் அருமையான வெளியீடு ஆக மலர்ந்தது.

பாரதிக்குப் பின் வந்த முதல் தலைமுறைக் கவிஞர்கள் அனைவரும்—பாரதிதாசன், ச. து. சு. யோகியார், தேசிக விநாயகம் பிள்ளை, நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை. சுத்தானந்த பாரதியார்— அம்மலரில் கவிதை எழுதியிருந்தனர்.

ந. பிச்சமூர்த்தியின் 'மகாகவிகள்' பிரசுரமா யிற்று. கலைவாணன், சாலிவாகனன், மந்தஹாசன் கவிதைகள் இருந்தன.

இத்தனைக்கும் மேலாக மலருக்குத் தனிச் சிறப்பு தந்தது வேலூர் வெ. கந்தசாமிக் கவிராயரின் 'ஓடாதீர்!' என்ற தனிரகக் கவிதை.

புதுமைப்பித்தன் அந்தப் பெயரில் கவிதை எழுத ஆரம்பித்திருந்தார். 'ஓகோ உலகத்தீர், ஓடாதீர்!' என்று தொடங்கும் நீளக் கவிதை இலக்கிய வாதிகளின் கவனத்தைப் பெரிதும் கவர்ந்தது. அது அவருடைய முதல் கவிதை அல்ல. அவரது முதலாவது கவிதை 'உண்டுண்டு—கடவுளுக்குக் கண் உண்டு' என்பதாகும். அது ஊழியன் பொங்கல் மலரில் வெளி வந்தது.

தரமான கதைகளும் கட்டுரைகளும் மலருக்குக் கனம் சேர்த்தன. இலங்கையின் மூத்த கதாசிரியர்களான சி. வைத்தியலிங்கம், இலங்கையர்கோன் கதைகள் வந்திருந்தன. அம்பிகைபாகன் கட்டுரை எழுதியிருந்தார்.

பொதுவாக, தமிழ்நாட்டின் விசேஷ மலர்கள் எல்லாம் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார், மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாதய்யர், மற்றும் மந்திரிகள், கவனிப்புக்கு உரிய பெரிய மனிதர்கள் எழுதிய கதை கட்டுரைக்குத்தான் முதல் மரியாதை கொடுத்துக் கொண்டிருந்தன.

'கிராம ஊழியன்' ஆண்டு மலர் அந்த மரபை ஒதுக்கிவிட்டது. அம்பிகைபாகன் என்ற இலங்கை எழுத்தாளரின் கட்டுரைதான் முதல் இடம் பெற்றிருந்தது.

இலங்கை எழுத்தாளர்களின் தனி அபிமானத்தைப் பெற்றிருந்த 'கிராம ஊழியன்' இதன் மூலம்

மேலும் அதிகமான மதிப்பை அங்கே பெற்றது. இதை இலங்கையிலிருந்து வந்த இலக்கிய ரசிகர்கள் குறிப் பிடத் தவறவில்லை.

அந்தக் காலகட்டத்தில் கொழும்புவில் வசித்த இலக்கியப் புரவலர் ஒட்டப்பிடாரம் ஆ. குருசுவாமி பிற்காலத்தில் அடிக்கடி இதை சொல்லிச் சொல்லி மகிழ்வது வழக்கம்.

கு. ப. ரா. அறிமுகம் செய்த ஓவியர்கள் ஊழியன் மலருக்கு உற்சாகத்துடன் தொண்டாற்றினார்கள். கதை கட்டுரை கவிதைகளின் தலைப்பு எழுத்துக்களை அழகாக எழுதி, சிறுசிறு சித்திரங்களும் தீட்டித் தந்தார்கள். கோபுலு வரைந்த நிழல் சித்திரம் (சில்ஹவுட்) ஒன்று அட்டை ஓவியமாக அணி செய்தது.

கே. ஏ. அப்பாஸ் கதை ஒன்று (ட்வெல்வ் ஹவர்ஸ்) 'ஒரு இரவு' என்ற தமிழாக்கமாக மலரில் இடம் பெற்றிருந்தது. அது ரசிகர்களின் பாராட்டுக் களையும் கண்டனங்களையும் அதிகம் பெற்றது.

**எழுத்தாளர் மகாநாடு**

முதலாவது தமிழ் எழுத்தாளர் மகாநாடு 1944 பிற்பகுதியில் கோயம்புத்தூரில் கூடியது. ஆர். திருஞானசம்பந்தம், ஆர். சண்முகசுந்தரம் மற்றும் கோவை எழுத்தாளர்கள் பலரின் தீவிர முயற்சியால் அம் மகாநாடு நடைபெற்றது.

வ. ரா. தலைவர். டி. எஸ். சொக்கலிங்கம் மகா நாட்டை ஆரம்பித்து வைத்து உரை நிகழ்த்தினார். பலர் உற்சாகமாகப் பேசினார்கள். பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. சென்னை, திருச்சி, மதுரை,

மற்றும் பல ஊர்களிலிருந்தும் எழுத்தாளர்கள் வந்து கலந்து கொண்டார்கள்.

இந்த மகாநாட்டில் கலந்து கொண்டவர்கள் ஒவ்வொருவராக எழுந்து தங்களை தாங்களே அறிமுகம் செய்துகொண்ட நிகழ்ச்சி சுவாரஸ்யமாக இருந்தது. அநேகர் புதுமையாகவும் சுவையாகவும் சுய அறிமுகம் செய்தனர்.

எனது சுய விளம்பரத்துக்கு அந்த அரங்கம் நல்ல இடமாகத் தோன்றியதால் நான் அடுக்கினேன்—

**நான் தான் வல்லிக்கண்ணன்**
**நான் தான் நையாண்டி பாரதி**
**நான் தான் சொனா. முனா.**
**நான் தான் சொக்கலிங்கம்**
**நான் தான் கெண்டையன் பிள்ளை**
**நான் தான் கோரநாதன்**
**நான் தான் மிவாஸ்கி**
**நான் தான் வேதாந்தி**
**நான் தான் பிள்ளையார்**
**நான் தான் தத்துவதரிசி**
**நான் தான் அவதாரம்**
**நான் தான் இளவல்**
**நான் தான் ரா. சு. கிருஷ்ணஸ்வாமி**

இப்படி வேகமாக அடுக்கிக் கொண்டே போனது எல்லோருக்கும் வியப்பு தந்தது; தமாஷாகவும் இருந்தது.

இத்தனை பெயர்களிலும் நான் எழுதிக் கொண்டிருந்தேன். கிராம ஊழியன் வாசகர்களில் பலர் நையாண்டி பாரதி, சொக்கலிங்கம், மிவாஸ்கி சொனாமுனா, கோரநாதன் ஆகியோர் தனித்தனி

நபர்களே என்று எண்ணிக்கொண்டிருந்தார்கள். அவ்விதம் தனித்தனி நடைகளில் தனிப்பட்ட விஷயங்கள் பற்றிய கட்டுரைகள், கதைகள், சிந்தனைகள் இப்பெயர்களில் வெளியிடப்பட்டன.

இதற்குப் பிறகு வெவ்வேறு சமயங்களில் பலவிதமான உபதேசங்களும் போதனைகளும் பல பேரிடமிருந்து எனக்குக் கிடைக்கலாயின.

—எதுக்காக இவ்வளவு அதிகம் எழுதுகிறீர்கள்? ஏன் பலரையும் தாக்கிக் கொண்டிருக்கிறீர்கள்? நையாண்டி பண்ணுவது நல்லதல்ல. இப்படி நிறைய எழுதிக்கொண்டிருந்தால் உங்களால் ரொம்ப காலம் எழுதமுடியாது. எழுத்தில் ரெஸ்ட்ரெய்ன்ட் (தன்னடக்கம், கட்டுப்பாடு) வேண்டும்.

இவ்விதம் சட்டாம்பிள்ளைத்தனம் பண்ணுகிறவர்கள் அவ்வப்போது எதிர்பட்டவாறு இருந்தார்கள். நான் என் போக்கில் எழுதிக்கொண்டே இருந்தேன்.

ரசிக்கிறவர்கள், பாராட்டுகிறவர்கள், கண்டிக்கிறவர்கள், குறைகூறுகிறவர்கள், கோபப்படுகிறவர்கள், உற்சாகமூட்டுகிறவர்கள், பரிகசிக்கிறவர்கள்—வாசகர்களிடையே இப்படிப் பலதரப்பட்டவர்களும் இருந்தார்கள். இப்பவும் இருக்கிறார்கள்.

உலகம் பலவிதம்! மனிதர்கள் ரகம் ரகம்!

**சினிமா சான்ஸ்!**

எனக்கு நல்லது செய்ய விரும்பினார். நாடக நடிகர், 'முத்தமிழ் கலா வித்வ ரத்ன' அவ்வை டி. கே. சண்முகம்.

வ—4

அவருக்கும் எனக்கும் நட்பு ஏற்பட்டது. ஒரு சுவையான கதை.

நான் திருநெல்வேலியில் 'சும்மா இருந்தபோது'—1942ல்—எனது எழுத்து வளர்ச்சிக்கு உதவக்கூடிய பத்திரிகை ஆசிரியர்களுக்குக் கடிதங்கள் எழுதிய சமயம், டி. கே. சண்முகத்துக்கும் எழுதினேன்.

மேலை நாட்டு எழுத்தாளர்களில் சிலர் நாடகக் கம்பெனிகளில் சேர்ந்து வாழ்ந்து, நாடகக் கலை அனுபவம் பெற்று, நல்ல பல நாடகங்கள் படைத்திருக்கிறார்கள். நானும் ஏன் அப்படி ஒரு நாடகக் குழுவில் சிறிது காலம் தங்கி, அனுபவம் பெற்று, கலைத் தரமான நாடகங்களை படைக்கக்கூடாது? இப்படி ஒரு 'மூளை அதிர்வு' (பிரெய்ன் வேவ்) எனக்கு ஏற்பட்டது.

டி.கே.எஸ். சகோதரர்களின் நாடக சபை நல்ல முறையில் கலைப்பணி புரிந்து கொண்டிருந்தது. டி.கே. சண்முகம் கலைஞர்; நல்ல இலக்கிய ரசிகர். எழுத முயன்று கொண்டிருந்தவரும் கூட. அவருடைய கட்டுரைகள் சில பத்திரிகைகளில் பிரசுரமாகியிருந்தன.

எனவே, எனது எண்ணத்தைத் தெரிவித்து நான் அவருக்குக் கடிதம் எழுதினேன்.

யோசிப்பதற்குப் போதிய கால அவகாசம் எடுத்துக்கொண்டு, அவருடைய 'பெரிய அண்ணாச்சி' டி.கே. சங்கரன் கருத்தையும் தெரிந்து கொண்டு, சண்முகம் எனக்கு பதில் எழுதினார்.

—உங்கள் எழுத்துக்களை நான் பல பத்திரிகைகளிலும் படித்து ரசித்திருக்கிறேன். உங்களைப்

போன்ற ஒரு எழுத்தாளரை எங்கள் நாடகக் கம்பெனியில் சேர்த்துக் கொண்டு, உங்கள் திறமையை எப்படிப் பயன்படுத்துவது என்று எனக்குப் புரிய வில்லை. நீங்கள் விரும்புகிற வாய்ப்பை உங்களுக்கு அளிக்கக் கூடிய நிலையில் நாங்கள் இல்லை. வருத்தம்.

இந்த ரீதியில் அவருடைய கடிதம் இருந்தது. சரி போ; வீசுகிற கல்லை வீசுயாச்சி! மாங்காய் விழவில்லை என்று என் மனக்குறளி கூறிக் கொண்டது.

பிறகு நான் 'சினிமா உலகம்' பத்திரிகையில் சேர்ந்திருந்த புதுசில், நாடகக் கம்பெனி விளம்பரம் விஷயமாக, பி.எஸ். செட்டியாரின் உறவினர் எஸ்.பி.கிருஷ்ணனும் நானும் டி.கே.எஸ். சகோதரர் களை சந்திக்க பாலக்காடு போனோம்.

அச்சமயம் அவர்கள் குழு அங்கே நாடகங்கள் நடத்திக் கொண்டிருந்தது. சண்முகத்தையும் அவர் சகோதரர்களையும் சந்தித்தேன். அக்காலகட்டத்தில் நடிகர்கள் எஸ்.வி. சுப்பய்யா, டி.வி. நாராயணசாமி, எஸ்.எஸ். ராஜேந்திரன் முதலியவர்கள் அந்நாடக சபையில் பணியாற்றி வந்தனர். இலக்கியத்தில் ஈடு பாடு கொண்ட அக்கலைஞர்களின் அறிமுகமும் எனக்குக் கிட்டியது. கால ஓட்டத்தில் அவர்கள் என் நண்பர்களானார்கள். டி.கே. சண்முகம் என் அன்புச் சகோதரர்களில் ஒருவர் ஆனார்.

1944ல், டி.கே.எஸ். சகோதரர்கள், ஈரோடு நகரில் முகாமிட்டிருந்த போது, முதலாவது நாடகக் கலை மாநாடு நடத்தினார்கள். அதற்கு 'சண்முகம் அண்ணாச்சி' என்னையும் அழைத்திருந்தார்.

அப்போது நான் சென்னையில் 'நவசக்தி'யில் இருந்தேன். நண்பர் சண்முகம் அழைப்பை ஏற்று ஈரோடு போனேன்.

மாநாடு சிறப்பாக நடந்து முடிந்தது. அச்சமயம் 'நாடகம்' என்ற பெயரில் ஒரு பத்திரிகை நடத்தும் யோசனை பற்றியும் பேசப்பட்டது.

டி.கே. சண்முகம், 'நாடகம் பத்திரிகையை நீங்கள்தான் பொறுப்பேற்று நடத்த வேண்டும். எல்லா ஏற்பாடுகளும் முடிவானதும் உங்களுக்கு எழுது வேன். நீங்கள் எங்கள் கம்பெனிக்கு வந்து விடலாம்' என்று தெரிவித்தார்.

நானும் 'ஆகட்டும்' என்று சொல்லி வைத்தேன்.

இடைக்காலத்தில் 'கிராம ஊழியன்' அழைப்பு வலியதாகவும் தொடர்ந்தும் வந்ததால், நான் ஊழியனுக்கே போகத் தீர்மானித்தேன்.

1944 பிப்ரவரி நடுவில் சென்னைக்கு வந்த சண்முகம் 'நவசக்தி'க்கு வந்து என்னை சந்தித்து, 'நாடகம்' பத்திரிகையை 'குமரி மலர்' மாதிரி மாதம் ஒரு புத்தகமாக நடத்தத் திட்டமிட்டிருக் கிறோம்; அட்டைக்கான ஓவியம் எழுதி பிளாக் செய்யக் கொடுத்தாச்சு; நீங்கள் எப்ப வருகிறீர்கள் என்று கேட்டார்.

நான் என் முடிவை சொன்னேன். 'நாடகம் பத்திரிகையை விட, மறுமலர்ச்சி இலக்கியப் பத்திரி கையான கிராம ஊழியன்தான் எனக்கு உகந்ததாக இருக்கும்' என்றேன்.

அவருக்கு ஏமாற்றமும் வருத்தமும்தான். இருப் பினும் பாராட்டி வாழ்த்திவிட்டுச் சென்றார்.

பின்னர், 'நாடகம் என்ற பத்திரிகையை நடத்தும் எண்ணத்தை நாங்கள் கைவிட்டுவிட்டோம் தகுதியான ஆள் கிடைக்காததே காரணம். 'நாடக'த்தைக் கருவிலேயே கொலை செய்த பாபம் உங்களையே சேரும்' என்று சண்முகம் எனக்கு எழுதினார்.

எங்களுக்கிடையே சுவாரஸ்யமான கடிதத் தொடர்பு நீண்ட காலம் வளர்ந்து வந்தது. நான் 'கிராம ஊழியன்' பத்திரிகையில் இருந்த காலத்தில், டி. கே. எஸ். குழுவினர் திருச்சியில் முகாமிட்டு' நாடகங்கள் நடத்தினர். அப்போது அடிக்கடி திருச்சிக்கு வந்து, சண்முகத்தையும் இதர கலைஞர்களையும் நேரில் கண்டு பேசிப் பழகவும், அவர்கள் நாடகங்களைப் பார்த்து மகிழவும் வாய்ப்புகள் ஏற்பட்டன. அந் நாடகங்கள் பற்றி 'கிராம ஊழியன்' இதழ்களில் விரிவாக எழுதினேன்.

1945ல் டி. கே. எஸ். சகோதரர்கள் கோவையில் முகாமிட்டிருந்தார்கள். ஏ. எஸ். ஏ. சாமி எழுதிய 'பில்கணன்' நாடகத்தை அவர்கள் அரங்கேற்றியிருந்தார்கள்.

'பில்கணன்' திரைப்படமாகத் தயாரிக்கப்பட்டு வந்தது. ஏ.எஸ்.ஏ. சாமிதான் அதன் டைரக்டர்' அவர் கோவை ஜூபிடர் பிக்சர்சில் நீண்டகால ஒப்பந்தத்தில் சேர்ந்திருந்தார். அவருக்குக் கதை வசனம் எழுதிக் கொடுப்பதற்கு திறமை உள்ள உதவியாள் ஒருவர் தேவைப்பட்டது. நடிகர் டி.கே.சண்முகமும் அவரும் கலந்து பேசி நான் தகுந்த நபராக இருப்பேன் என்று தீர்மானித்தார்கள்.

நண்பர் சண்முகம் எனக்குக் கடிதம் எழுதினார். நேரில் பேசி முடிவு செய்ய வேண்டிய விஷயம், அவசியம் வரவும் என்று குறிப்பிட்டிருந்தார்.

இப்போது என் அண்ணாவும் கோவையில் இருந்தார். 'சினிமா உலகம்' துணை ஆசிரியராக.

நான் 'சினிமா உலகம்' உறவைத் துறந்து விட்டு, சென்னை சென்ற பின்னரும் அதன் தொடர்பு என்னை விட்டதில்லை. சென்னைக்கு வந்த பி.எஸ். செட்டியார் 'நவசக்தி' ஆபீசுக்கு வந்த என்னை சந்தித்தார். அவர் தங்கியிருந்த இடத்துக்கு அழைத்துப் போய் அன்பாக உபசரித்தார்.

'நீங்கள் உங்கள் வளர்ச்சியைக் கருதி, பிரிந்து வந்து விட்டது சரிதான். உங்களைப் போல் சினிமா உலகம் பத்திரிகையை கவனித்துக் கொள்ளக் கூடிய ஒருவரை சிபாரிசு செய்யுங்கள். நான் பத்திரிகையில் சில அபிவிருத்திகள் செய்வேன்' என்று தெரிவித்தார்.

என் அண்ணா அசோகனை நான் குறிப்பிட்டேன். என் அண்ணாவையும் அவருக்குத் தெரியும். ஆகவே, அவர் தயங்கவில்லை. அசோகன் 'சினிமா உலகம்' பத்திரிகையின் துணை ஆசிரியர் ஆனார். பத்திரிகையும் வளர்ச்சிப் பாதையில் முன்னேறிச் சென்றது.

எனவே, என் அண்ணாவையும் சந்திக்கலாம் என்று நான் கோவை போனேன்.

நண்பர் டி.கே. சண்முகம் ஜுபிடர் பிக்சர்ஸ் அதிபர்களான சோமு, முகைதீன் இருவருக்கும், டைரக்டர் ஏ.எஸ்.ஏ. சாமிக்கும் என்னை அறிமுகம் செய்து வைத்தார்.

அப்புறம் தனியாக சண்முகம், சாமி, நான் மூவரும் பேசினோம். சண்முகம் விஷயத்தைச் சொன்னார். டைரக்டர் சாமி வெளிப்படையாகவே பேசினார்.

'இப்ப எனக்கு ஆறு படங்கள் இருக்கு. ஆறு படங்களுக்கும் வசனம் எழுதணும். ஆனால் படத்திலே என் பேர்தான் வரும். உங்களுக்கு நியாயமான பணம் கிடைக்கும்படி ஏற்பாடு செய்வேன். மதுரை முருகன் டாக்கீஸ் தயாரிக்கிற ரத்னகுமார் படத்தை டைரக்ட் பண்ணுகிற பொறுப்பும் எனக்கு வரும். நீங்கள் ஜூபிடர் படங்கள் ஆறுக்கும் எனக்காக வசனம் எழுதித் தருவதுக்காக, ரத்னகுமாருக்கு வசனம் எழுதுகிற சான்சையும் உங்களுக்கு வாங்கித் தருவேன். அந்தப் படத்தில் உங்க பேரைப் போட ஏற்பாடு செய்வேன். பணமும் நிறையக் கிடைக்கும்' என்றார்.

சினிமாத் துறை மோகம் எனக்கு இருந்ததில்லை. அவர் பேரம் பேசிய தோரணையும் எனக்குப் பிடிக்கவில்லை.

'சினிமாப் படங்களுக்குக் கதைவசனம் எழுதணும்கிற எண்ணமே எனக்கு எழவில்லை. இலக்கிய உலகத்தில் முன்னேறணும்கிற ஆர்வம்தான் இருக்கு. இலக்கியப் பத்திரிகைக்காக உழைப்பதே எனக்கு சந்தோஷமாயிருக்கு' என்று சொன்னேன்.

'இருக்கட்டுமே. கிராம ஊழியனை விட்டுப் போட்டு நீங்க இங்கே வரவேண்டாம். பத்திரிகையையும் கவனித்துக் கொள்ளுங்க. அவ்வப்போது கோயம்புத்தூர் வாங்க. எழுத வேண்டியதை

எழுதுங்க. நீங்க போறதுக்கும் வாறதுக்கும் வேண்டிய வசதிகளை, சௌகரியங்களை நாங்க செய்து தாறோம்' என்று டைரக்டர் சாமி அறிவித்தார்.

அவ் வார்த்தைகளும் என்னை கவர்ச்சிக்க வில்லை.

'இல்லே. அப்படிச் செய்ய முடியாது. நான் முழு நேரமும் இலக்கியப் பத்திரிகைக்காக உழைக்கவே விரும்புகிறேன். சினிமாத்துறை எனக்கு சரிப்படாது என்று திட்டமாகக் கூறி விட்டேன்.

'நல்லா யோசியுங்க. இதுமாதிரி சான்ஸ் உங்களுக்கு வரவே வராது. ஆறு ஜூபிடர் படங்கள்; முருகன் டாக்கீஸ் படம் ஒண்ணு. பணம் நிறையக் கிடைக்கும். பேரும் வரும். அப்புறம் சான்சுகள் உங்களை தேடி வரும்' என்று அவர் ஆசை காட்டினார்.

'நீங்க இதை ஒப்புக் கொள்ளலாம்னுதான் எனக்கும் தோணுது' என்று சண்முகம் சொன்னார்.

'சினிமாவுக்கு வசனம் எழுதணும்கிற எண்ணமே எனக்கு இல்லை' என்று நான் உறுதியாய் அறிவிக்கவும், அவர்கள் மவுனமாகி விட்டார்கள்.

'உருப்படாத கேஸ்!' என்று அவர்கள் எண்ணியிருப்பார்கள்.

### கிராம ஊழியன் வளர்ச்சி

ஊழியன் ஆண்டு மலர் வெளியான சில மாதங்களுக்குப் பிறகு, திருலோக சீதாராம் ஊழியன் நிறுவனத்தை விட்டு வெளியேறினார்.

அவர் தனது வளர்ச்சி நலன் கருதித் தனியே சில திட்டங்கள் வகுத்திருந்தார். திருச்சியில் குடியேறினார்.

திருச்சியில் சிவஞானம் என்ற பிரமுகர் 'சிவாஜி' வாரப் பத்திரிகையும் அச்சகமும் நடத்திக் கொண்டிருந்தார். அந்த நிறுவனத்தில் 'உழைக்கும் பங்குதாரர்' ஆக சீதாராம் சேர்ந்தார். 'சிவாஜி' பத்திரிகையின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் பாடுபட்டார். விரைவிலேயே பத்திரிகையையும் அச்சகத்தையும் அவரே வாங்கிக் கொண்டு,சொந்தப் பொறுப்பில் அவற்றை நடத்தினார்.

'கிராம ஊழியன்' நிர்வாக ஆசிரியர்—அ. வெ. ர. கிருஷ்ணசாமி, ஆசிரியர்—வல்லிக்கண்ணன் என்று பெயர்கள் தாங்கிப் பிரசுரமாயிற்று.

இதழ்தோறும் அது 800 பிரதிகள்தான் அச்சாயிற்று. அநேக ஊர்களில் அதற்கு விற்பனையாளர்கள் இருந்தார்கள்.எனினும்,பல இடங்களிலும் அஞ்சு, பத்து, இருபது பிரதிகள் என்ற கணக்கிலேயே அது போய்க்கொண்டிருந்தது. ஆயினும், 'கிராம ஊழியன்' எழுத்தாளர்கள், பத்திரிகைக்காரர்கள், புத்தகப் பிரசுரகர்த்தர்கள் கவனத்தை கவர்ந்து வந்தது.

பத்திரிகைகளுக்கு 'மாற்றுப் பிரதி' ஆகவும், பெரும்பாலான எழுத்தாளர்களுக்கு இலவசமாகவும் ஊழியன் அனுப்பப்பட்டு வந்தது. அன்று தொழில் புரிந்து வந்த முக்கியப் பதிப்பகங்கள் அனைத்தும் ஊழியன் மதிப்புரையை எதிர்பார்த்தன. மதிப்புரைக்காகப் புத்தகங்கள் அனுப்பி வைத்தன. அதனால் புதிய புத்தகங்கள் அதிகமாகவே கிடைத்தன.

புத்தக மதிப்புரையை விரிவாகவும், சூடாகவும் சுவையாகவும் நான் எழுதி வந்தேன். பாதிக்கப் பட்டவர்களால் அவை தாக்குதல்களாகக் கருதப் பட்டன. பாராட்டப்பட வேண்டிய புத்தகங்கள் குறித்து விரிவாக எழுதினேன். அப்போது, சம்பந்தப் பட்ட எழுத்தாளர்களும் பதிப்பகத்தார்களும் மிக மகிழ்ந்து போனார்கள். ஊழியன் புத்தக மதிப் புரையை பாராட்டிப் பேசினார்கள். இதெல்லாம் மனித இயல்பு எனக் கருதி நான் எதையும் பெரிது படுத்துவதில்லை.

தி.க. சிவசங்கரன் 'துருவன்' என்ற பெயரில் சினிமாப் பட விமர்சனங்கள் எழுதிக்கொண்டிருந் தார். விறுவிறுப்பும் வேகமும் நிறைந்த அவ்விமர்சனங் கள் ரசிகர்களின் கவனிப்பையும் பாராட்டுதல்களை யும் பெற்று வந்தன.

'முச்சந்தி' என்றொரு பகுதி. இலக்கிய விவகாரங் களையும் வம்புகளையும் 'பிள்ளையார்' முச்சந்தியில் போட்டு உடைத்தார்.

இலக்கியப் பிரச்னைகள் சம்பந்தமான கட்டுரை கள், கவிதைகள் சிறுகதைகள் பற்றிய கட்டுரைகள் ஊழியனில் பிரசுரமாயின.

ந. பிச்சமூர்த்தி இதழ்தோறும் கவிதைகள் எழுதினார். யாப்பில்லாக் கவிதைகளை அவர் எழுதிக்கொண்டிருந்ததால், அதை எதிர்த்தவர்களும் 'பிச்சமூர்த்திக்கு யாப்பிலக்கணம் தெரியாது. அதனால்தான் இப்படி எழுதுகிறார்' என்று குறிப் பிட்டார்கள்.

அது தவறான கருத்து என்று சுட்டிக்காட்டு வதற்காக ந. பி. இலக்கண வரம்புக்கு உட்பட்ட

கவிதைகளும் எழுதலானார். அவை அனைத்தும் ஊழியனில் வெளிவந்தன.

சிட்டியும் அடிக்கடி எழுதி உதவினார்.

'இலங்கையர்கோன்' தொடர்ந்து கதைகளும் நாடகங்களும் எழுதி அனுப்பினார். ஊழியன் நின்று போகிற வரை அவருடைய எழுத்துக்கள் கிடைத்துக் கொண்டிருந்தன.

சுப நாராயணன் என்ற சுய சிந்தனையாளர் வை. கோவிந்தனின் 'சக்தி' பத்திரிகையில் 1930 களில் சர்குலேஷன் மானேஜராகப் பணியாற்றி வந்தார். தி.ஜ.ர. 'சக்தி'யிலிருந்து விலகிய பிறகு 40களில் சுப. நாராயணன் அதன் ஆசிரியரானார். சில வருடங்கள் அவர் அப்பதவியை வகித்தார். அச் சமயம் அவர் கிராம ஊழியனுக்கு சிந்தனைக்கட்டுரை கள் எழுதி வழங்கினார்.

அவை தனிரகமான கட்டுரைகளாக விளங்கின. பின்னர் அவை 'வாழப் பிறந்தோம்' என்ற தொகுப்பு நூலாகப் பிரசுரம் பெற்றன.

சுப. நாராயணன் என் நண்பர்களில் ஒரு 'இன்ட்டரஸ்டிங் கேரக்டர்' ஆக விளங்கினார். தமிழ் அபிமானமும் சிந்தனை வேகமும் கொண்டிருந்த அவருக்கு தமிழ் பத்திரிகைகளையும், தமிழ் எழுத் தாளர்களையும், தமிழ் நாட்டின் பெரும் பங்கு மனிதர்களின் போக்குகளையும் பிடிக்கவில்லை. எரிச்சலுற்று பலரிடமும் சண்டை பிடித்துக் கொண் டிருந்தார். பிறகு தமிழ் நாட்டை விட்டு வெளியேறி கோலாலம்பூர் போய் சேர்ந்தார். அங்கும் அவருடைய இயல்புகள் அவருக்கு 'கெட்ட பெயர்' தான் வாங்கித்

தந்தன. தமிழகத்தில் திறமைக்கு உரிய கவனிப்பையும் மதிப்பையும் பெறாமல் போன அந்த எழுத்தாள நண்பர் சில வருடங்களுக்கு முன்னர் மலேசியாவில் மரணம் அடைந்தார். 'un-honoured, unwept and unsung' ஆக மறைந்து போன எத்தனையோ மனிதர்களில் அவரும் ஒருவர்.

'கிராம ஊழியன்' நல்ல மொழிபெயர்ப்புக் கதைகளையும் பிரசுரித்தது. வில்லியம் சரோயன், செக்காவ், மாப்பசான், மற்றும் சிறந்த சிறுகதை ஆசிரியர்களின் கதைகளை அசோகன் தமிழாக்கி வந்தார்.

சில புதிய எழுத்தாளர்களும் எழுதிக்கொண்டிருந்தார்கள். அவர்களில் பராங்குசம் (கே. பி. ரங்காச்சாரி) முக்கியமானவர்.

1930களின் பிற்பகுதியில் தேவேந்திரநாத் சத்யார்த்தி என்பவர் வட இந்தியாவிலிருந்து ஊர் ஊராகச் சென்று நாடோடிப் பாடல்களை சேகரம் செய்து, அவை பற்றிப் பத்திரிகைகளில் எழுதினார். அவர் தமிழ்நாட்டுக்கும் வந்தார்.

அவர் வந்து போனதன் விளைவாக, தமிழ் நாட்டிலும் நாடோடிப் பாடல்களை சேகரிக்க வேண்டும் என்ற விழிப்பு பத்திரிகை உலகில் ஏற்பட்டது. சில எழுத்தாளர்கள் நாட்டுப் பாடல்கள் சேகரிப்பதிலும், அவை பற்றி எழுதுவதிலும் ஆர்வம் கொண்டனர். அத்தகைய தொகுப்பு நூல்களும் வந்தன.

மக்கள் மத்தியில் உயிருடன் வாழ்ந்த கதைகளையும் திரட்ட வேண்டும்; அவற்றுக்கு எழுத்து உருவம் கொடுக்க வேண்டும் என்று நாங்கள் கருதினோம்,

அவற்றில் சிலவற்றை 'நாடோடிக் கதைகள்' என்ற தலைப்பில் ஊழியன் பிரசுரித்தது. அவற்றை என் அண்ணா ரா. சு. கோமதிநாயகம் எழுதினார்.

கிராம ஊழியனுக்கு நையாண்டி பாரதியின் கட்டுரைகளும், சொனா. முனா. எழுத்துக்களும் தனித்தன்மை தந்து கொண்டிருந்தன.

அ. வெ. ர. கிருஷ்ணசாமி, ரெட்டியார், தேவராய பூபதி, அ. வெ. ர. கி. என்ற பெயர்களில் கட்டுரைகள், கதைகள் எழுதினார். கண்ணன் என்ற பெயரில் கவிதைகள் எழுதி வந்தார்.

'கிராம ஊழியன்' கவனிப்புக்கும், பேசப்படுவதற்கும் உரிய ஒரு பத்திரிகையாக வளர்ந்து வந்த போதிலும், அது லாபகரமாக நடைபெறவில்லை. லிமிடெட் நிறுவனத்தின் செயலாளராக அ. வெ. ர. கி. இல்லாது, வேறு எவரேனும் பொறுப்பு வகித்திருந்தால், பத்திரிகையை ஒன்றிரு வருடங்களிலேயே நிறுத்திவிட்டிருக்கக் கூடும். ரெட்டியாரின் பாரதி பற்றுதலும், கவிதை மோகமும், இலக்கிய ஈடுபாடும், எழுத்து ஆர்வமுமே பத்திரிகையை நஷ்டத்துடன் தொடர்ந்து நடத்தும் உற்சாகத்தை அவருக்குத் தந்திருந்தன.

1947ல், இலக்கியப் பத்திரிகை நடத்தியது போதும் என்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டுவிட்டது. யுத்த காலம். அச்சு யந்திரங்களுக்கு நல்ல விலை இருந்தது. ஊழியன் பிரஸ் அச்சு யந்திரங்களை மிக லாபகரமான விலைக்கு விற்கக் கூடிய வாய்ப்பு வந்தது. உரிய காலத்தில், உரிய முறையில் அதை செய்து முடித்தார் ரெட்டியார்.

1947 மே மாதம் 'கிராம ஊழியன்' கடைசி இதழ் பிரசுரமாயிற்று.

அதுதான் கடைசி இதழ் என்று அறிவிக்கப்படவில்லை. தமிழ் பத்திரிக்கை உலக மரபுப்படி, பெரிதாக அளக்கும் விளம்பர அறிவிப்பு அந்த இதழில் இடம் பெற்றது.

கிராம ஊழியன் வளர்ச்சியைக் கருதி, பத்திரிகையை திருச்சி நகருக்கு மாற்றுகிற திட்டம் இருப்பதாகவும், அதற்கான ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக சிறிது காலம் பத்திரிகை நிறுத்தி வைக்கப்படுகிறது என்றும், மீண்டும் சிறப்பான முறையில் பத்திரிகை வெளிவரும் என்றும் அறிவிக்கப்பட்டது.

ஊழியனில் நான் எழுதி வந்த 'விடியவில்லை!' என்ற புதுமையான, சுவாரஸ்யமான, நையாண்டியும் சிந்தனைக்கருத்துகளும் நிறைந்த நாவல் தொடர் கதையாக வந்து கொண்டிருந்தது. அது பற்றி முழுப் பக்க தனி அறிவிப்பும் இருந்தது.

'வல்லிக்கண்ணன் எழுதும் 'விடியவில்லை!' இன்னும் முடியவில்லை. இந்த நாவல் விரைவில் புத்தகமாக வெளிவரும்' என்றும் விளம்பரம் செய்யப் பட்டிருந்தது.

'கிராம ஊழியன்' திருச்சியிலிருந்து வெளிவரவுமில்லை. 'விடியவில்லை' நாவலை நான் எழுதி முடிக்கவுமில்லை; அது புத்தகமாக வரவும் இல்லை.

**புத்தகப் பிரசுரம்**

புத்தக வெளியீடு சம்பந்தமாக நான் ஆரம்ப காலம் முதலே பெரும் கனவுகள் கண்டு கொண்டிருந் தேன்.

எனது எழுத்துக்களை எல்லாம் அழகாக, உயர்ந்த முறையில், வசீகரமான புத்தகங்களாக வெளியிட வேண்டும் என்று ஆசைப்பட்டேன். அவற்றை அப்படி வெளியிட எந்தப் பதிப்பகத்தாரும் முன்வர மாட்டார்கள். நானே பிரசுரம் செய்வேன்; 'சாந்தி நிலையம்' வெளியீடுகளாக அவை பிரசுரம் பெறும் என்று எண்ணம் வளர்த்தேன்.

நான் எழுதிய உருவகக் கதைகள் என் பெயருக்குத் தனி கவனிப்பும் மதிப்பும் சேர்த்திருந்தன. ஆஸ்கார் ஒயில்ட் 'ப்ரோஸ் போயம்ஸ்' என்ற தலைப்பில் எழுதிய உருவகக் கதைகளும், ஐவான் துர்கனேவ் எழுதிய உருவகக் கதைகளும் (ப்ரோஸ் போயம்ஸ்) தமிழில் உருவகக் கதைகள் எழுதுவதற்கு என்னை ஊக்குவித்தன. நான் எழுதியவை 1940களில் 'கலைமகள்' 'கலாமோகினி' 'கிராம ஊழியன்' 'சினிமா உலகம்' இதழ்களில் வெளிவந்தன.

அவற்றை மிக உயர்ந்த முறையில் புத்தகமாக்கி 'சாந்தி நிலையம்' வெளியீடாகக் கொண்டு வர வேண்டும் என்ற கனவு எனக்கு இருந்தது.

அமெரிக்காவின் 'Random House' பப்ளிகேஷன்ஸ் மாதிரி சாந்தி நிலையம் வெளியீடுகள் சிறப்பானவையாக விளங்கும்— விளங்க வேண்டும்— என்று ஆசைப்பட்டேன். 'மாடர்ன் லைபிரரி' பதிப்புகள் என்று வெகுதரமான இலக்கிய நூல்களை அந்தப் பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

அதுக்குத் தேவையான பணம் எப்படியாவது கிடைக்கும் என்றும் நான் கனவு கண்டேன்.

மகாகவி சுப்பிரமணிய பாரதியும் அவர் காலத்தில் இப்படிக் கனவு கண்டு கொண்டிருந்தார். தனது

கவிதைகளை உயர்ந்த முறையில் அச்சிடவும், சிறந்த இலக்கிய நூல்களை வெளியிடுவதற்கும் தனக்கு பத்தாயிரம் ரூபாய் வேண்டும் என்று அவர் விளம்பரம் கூட வெளியிட்டிருந்தார்.

நான் பணம் தேவை என்று விளம்பரப் படுத்தவில்லை. சும்மா கனவுகளை வளர்த்துக் கொண்டிருந்தேன்.

'கையில் காசில்லை, கடன் கொடுப்பார் யாருமில்லை!' என்ற நிலைமைதான் எப்பவும்.

எனவே, உணர்ச்சி பூர்வமாகக் கனவுகளை வளர்த்துக் கொண்டிருப்பது தவிர வேறு வழி கிடையாது. கனவுகளை வளர்க்கும் உள்ளம் பெற்றிப்பது ஒரு நற்பேறு என்பதில் சந்தேகமில்லை.

நான் 'சினிமா உலகம்' பத்திரிகையில் இருந்த போது அறிமுகமான— இரண்டு நண்பர்கள், தொழில் துறையில் ஈடுபட்டிருந்தவர்கள், புத்தகப் பிரசுரத்திலும் ஈடுபட ஆசைப்பட்டார்கள். எனது கதைகளைத் தொகுத்து ஒரு புத்தகமாகக் கொண்டு வர விரும்பினார்கள். அப்படியே செய்தார்கள்.

'கல்யாணி முதலிய கதைகள்' கோயம்புத்தூரிலிருந்து வெளிவந்தது.

என் நண்பர் திருவனந்தபுரம் எஸ். சிதம்பரம் எழுத்து உலகில் புகழ் பெற வேண்டும் என்று ஆசைப்பட்டார். வைர வியாபாரியின் மகன். பெயர் பெற்றுள்ள எழுத்தாளர்களின் எழுத்துக்களை புத்தகமாகப் பிரசுரிப்பதன் மூலம் கவனிப்பும் புகழும் பெறலாம் என்று அவருக்கு யாரோ ஆலோசனை சொன்னார்களாம். புத்தகம் வெளியிடத் துணிந்த

சிதம்பரம் என் கதைகளைத் தொகுத்துப் பிரசுரிக்க முன் வந்தார்.

'நாட்டியக்காரி' என்ற கதைத் தொகுப்பு வந்தது. இது கவிக்குயில் நிலைய வெளியீடு ஆக நாகர்கோவிலிலிருந்து பிரசுரம் பெற்றது.

எஸ். சிதம்பரம் 'கவிக்குயில் மலர்' என்று விசேஷ மலர் தயாரித்து வெளியிட்டார். இரண்டு மலர்கள் வந்தன. புதுமைப்பித்தன் கவிதைகள் அவற்றில் இடம் பெற்றன. வேறு பலரது கதைகள் கட்டுரைகளும் வந்தன.

சிதம்பரம் 'வைரம்' என்ற பெயரில் கவிதைகள் எழுதினார். அவற்றில் சில 'கிராம ஊழியன்' இதழ்களில் வந்தன. அவர் தனது கவிதைகளை 'காதலிக்கு' என்ற தொகுப்பாக வெளியிட்டார்.

புதுமைப்பித்தன் திருவனந்தபுரத்தில் தங்கி காச நோயினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த போது அவருடன் பழகக்கூடிய வாய்ப்பை சிதம்பரம் பெற்றார். புதுமைப்பித்தனின் இறுதி நாட்களில் இவர் அவருக்கு உதவியாக இருந்தார்.

இலக்கியம் மூலம் புகழ் பெறவேண்டும் எனும் ஆசை சிதம்பரத்துக்கு இரண்டு மூன்று வருடங்களிலேயே அடங்கி விட்டது. அப்புறம் அவர் போக்கில் மாற்றம் ஏற்பட்டது.

புகைப்படக் கலை கற்று புகழ் பெற ஆசைப் பட்டார் சிதம்பரம். அதற்காக ஆயிரக்கணக்கில் பணத்தை காலி பண்ணினார். சினிமா கேமிராக் கலைப் பயிற்சி பெறுகிறேன் என்று பெங்களூரில் வாசம் செய்தார். சரத் சந்திரரின் கதாபாத்திரமான

தேவதாஸ் மர்திரி வாழ்ந்து, கெட்டு, அல்பாயுள் மரணம் அடைந்தார்.

வாழ்க்கை சிக்கல்கள் நிறைந்தது. விசித்திரமான மனிதர்களைக் கொண்டது. எளிதில் புரிந்து கொள்ள முடியாதது. மனிதர்கள் ஏன் எப்படி எப்படி எல்லாமோ வாழ்கிறார்கள் என்று விளங்கிக் கொள்ள வகை செய்யாதது. எஸ். சிதம்பரம் போன்றவர்களின் வரலாறு வாழ்க்கைப் புதிரின் சிக்கல்களை மேலும் அழுத்தமாக்குவதாகவே அமைகிறது.

நான் துறையூரில் இருந்த போது, உயரிய முறையில் பெரிய புத்தகங்களை வெளியிடுவதற்குக் காலமும் வசதியும் இல்லாது போனாலும், பரபரப்பூட்டும் சிறுசிறு புத்தகங்கள் பிரசுரிப்பதற்கு வாய்ப்பு கிட்டியது.

நையாண்டி பாரதி குறுநாவல் 'குஞ்சாலாடு', கோரநாதன் எழுதிய 'கோயில்களை மூடுங்கள்!', சொக்கலிங்கம் எழுதிய 'ஓடிப்போனவள் கதை', மிவாஸ்கியின் 'அடியுங்கள் சாவுமணி', கோரநாதனின் 'ஈட்டி முனை' ஆகியவை சாந்தி நிலைய வெளியீடுகளாகப் பிரசுரமாயின.

ஊழியன் அச்சகத் தோழர்கள் 'எரிமலைப் பதிப்பகம்' என்று ஒரு பிரசுரம் தொடங்கினார்கள். தில்லை வில்லாளன் எழுதிய 'சாவோலை' கருணாநிதியின் 'பலிபீடம் நோக்கி' ஆகியவற்றுடன், கோரநாதன் எழுதிய 'படவுலகில் கடவுள்கள்' என்ற சிறு பிரசுரமும் வந்தது.

இவை 1946-47ல் நிகழ்ந்தன. இப் பிரசுரங்கள் பரபரப்பான விற்பனையைப் பெற்றன. முக்கியமாக 'கோயில்களை மூடுங்கள்!' என்ற வெளியீடு. ஆறு

மாதங்களில் மூன்று பதிப்புகள் கண்டது அது. விறுவிறுப்பும் வேகமும் நிறைந்த நடையில் சூடான சிந்தனைகளைக் கூறும் அறிவு நூல் அது.

ஒரு இரண்டாயிரம் ரூபாய் அந்தக் காலத்தில் மொத்தமாக எனக்குக் கிடைத்திருக்குமானால், 'சாந்தி நிலையம்' நிலை பெற்று புத்தக வெளியீட்டில் சாதனைகள் புரிந்திருக்கக் கூடும். அது நிகழ வாய்ப்பு இல்லாது போய்விட்டது.

1950களில் ஐயாயிரம் ரூபாய் வேண்டும் என்ற நிலை ஏற்பட்டது. 60களில் என் கனவுகளை நனவாக்க எனக்கு பத்தாயிரம் ரூபாய் வேண்டும் என்று தோன்றியது. எழுபதுகளில் பத்தாயிரம் ரூபாய் பற்றாது என்ற எண்ணம் உண்டாயிற்று. எண்பதுகளில், காகித விலை ஏற்றம், அச்சுக்கூலி உயர்வு முதலியவைகளைக் கருதும் போது, எனது புத்தகங்களை நானே பிரசுரிப்பதற்கு எனக்கு ஒரு லட்சம் ரூபாய் வேண்டும் என்று தோன்றுகிறது.

அப்பெரும் தொகை எனக்குக் கிடைக்கப் போவதுமில்லை. புத்தக வடிவம் பெறாது குவிந்து கிடக்கிற என் எழுத்துக்கள் நூல்களாக வெளி வரப் போவதும் இல்லை.

இதற்காக நான் வருத்தப்படுவதும் இல்லை. 'சரிதாம் போ! இதனால் எல்லாம் எதுவும் குடி முழுகிப் போகாது!' என்றுதான் என் மனக்குறளி கொக்கரிக்கும்.

'ஸோரி, விட்டுத் தள்ளு!' என்று அனைத்தையும் ஒதுக்கி விடுகிறேன்.

**மீண்டும் சென்னைக்கு**

'கிராம ஊழியன்' நின்று விட்ட பின்னரும் சில மாதங்கள் நான் துறையூரிலேயே தங்கியிருந்தேன்.

சிறு பிரசுரங்களின் விற்பனை வேலை தொடர்ந்து இருந்தது.

1947 ஆகஸ்டு 15ல் நாட்டிற்கு விடுதலை கிடைத்தது. இந்தியா சுதந்திர நாளை கோலாகலமாகக் கொண்டாடிய காலத்தில் நான் அந்தச் சிற்றூரில் தான் இருந்தேன்.

'சினிமா உலகம்' பத்திரிகை கோயம்பத்தூரிலிருந்து மறுபடியும் சென்னை சேர்ந்திருந்தது. அது நன்றாகவே நடைபெற்றது. அண்ணா அசோகன் துணை ஆசிரியராக இருந்தார். சொந்தப் பத்திரிகையை கவனிப்பது போல் மிகக்கடுமையாக உழைத்து அவர் அதை வளர்த்து வந்தார். அதில் என்னுடைய எழுத்துக்கள் வெளியாயின.

துறையூரில் நான் தனியாக இருப்பதைவிட சென்னைக்கே வந்து விடலாம்; சென்னையிலிருந்து சிறு நூல்களின் பிரசுரத்தையும் வளர்க்கலாம் என்று என் அண்ணா அபிப்பிராயம் தெரிவித்தார்.

துறையூரில் ஊழியன் பிரஸ் குறைந்த விகிதத்தில் என் புத்தகங்களை அச்சிட்டுத் தந்தது. அச்சுத் தொழிலாள நண்பர்கள் மிகுந்த உற்சாகத்துடன் ஒத்துழைப்பு தந்து கொண்டிருந்தார்கள். சென்னைக்குப் போனால் இவை கிடைக்க மாட்டா. எனவே நான் தயங்கினேன்.

ஆனால், சென்னை சேர்ந்தால் உலக இலக்கிய நூல்கள் அதிகம் கிடைக்கும். இது ஒரு கவர்ச்சி அம்சமாக இருந்தது.

இடைக்காலத்தில் என் அண்ணாவும் நானும் ஆங்கில நூல்களை அதிகம் வாங்க ஆரம்பத்திருந் தோம். மாடர்ன் லைபிரரி, திங்கர்ஸ் லைபிரரி, ஓர்ல்ட் க்ளாஸிக்ஸ், பெங்குவின் வெளியீடுகளை மேலும் அதிவேகமாக வாங்குவதற்கு சென்னையில் வசதி ஏற்படும் என்ற எண்ணமும் எனக்கு இருந்தது.

இச் சமயத்தில் எம்.கே.டி. சுப்பிரமணியம் என்பவரின் தூண்டுதலும் சேர்ந்தது.

சுதந்திரத்துக்குப் பின்னர் தமிழ் நாட்டில் திராவிடக் கழகப் பத்திரிகைகள் வேகமாகவும், எண்ணிக்கையில் அதிகமாகவும் தோன்றிக்கொண்டிருந்தன. உற்சாகிகள் புதிது புதிதாகப் பத்திரிகைகள் ஆரம்பித்தார்கள்.

அப்படிப்பட்ட உற்சாகிகளில் ஒருவரான எம்.கே.டி.சுப்பிரமணியம் 'தீப்பொறி' என்ற பெயரில் ஒரு வாரப் பத்திரிகை நடத்த ஆசைப்பட்டார். அதற்கு கோரநாதனை ஆசிரியராக்க விரும்பினார்.

கோரநாதன் எழுத்துக்களுக்கு தமிழ்நாட்டில் அப்போது பெரும் வரவேற்பு இருந்தது. சிந்தனைக் கருத்துக்களை சூடாக உணர்ச்சி செறிந்த நடையில் தந்தன கோரநாதன் எழுத்துக்கள். அந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி கொள்ள எம். கே. டி. எஸ். விரும்பினார். எனக்கு எழுதினார்.

துறையூர் அச்சுத் தொழில் தோழர்களும் ஊக்க மூட்டினார்கள்.

என்ன கெட்டுப் போகப் போகிறது! சும்மா இருப்பதைவிட, பரபரப்பு ஏற்படுத்தக்கூடிய இந்த

சோதனை முயற்சியிலும் சிறிது காலம் ஈடுபடலாமே என்ற எண்ணம் எனக்கு எழுந்தது.

ஆகவே, நான் திரும்பவும் சென்னைக்கு வந்தேன். நாடு அறிந்த ஒரு எழுத்தாளன் ஆக!

1947 செப்டம்பர் 28 அன்று.

எனது சென்னை வாழ்க்கையும், எழுத்துலக அனுபவங்களும்—

அது தனி வரலாறு ஆகும்.

□□□

# புதுக்கவிதைகளின் தோற்றம்

- சி. சுப்பிரமணிய பாரதி
- ந. பிச்சமூர்த்தி
- கு. ப. ராஜகோபாலன்
- வல்லிக்கண்ணன்
- நையாண்டி பாரதி

சி. சுப்பிரமணிய பாரதி

## காற்று

காற்றே, வா. மெதுவாக வா.
ஜன்னல் கதவை அடித்து உடைத்து விடாதே.
காயிதங்களை யெல்லாம் எடுத்து வீசி எறியாதே.
அலமாரிப் புத்தகங்களைக் கீழே தள்ளி விடாதே.
பார்த்தையா? இதோ தள்ளி விட்டாய்.
புஸ்தகத்தின் ஏடுகளைக் கிழித்து விட்டாய்.
மறுபடி மழையைக் கொண்டுவந்து சேர்த்தாய்.
வலி யிழந்தவற்றைத் தொல்லைப்படுத்தி

வேடிக்கை பார்ப்பதிலே நீ
மஹா ஸமர்த்தன்.

நொய்ந்த வீடு, நொய்ந்த கதவு, நொய்ந்த கூரை,

நொய்ந்த மரம், நொய்ந்த உடல், நொய்ந்த உயிர்,
நொய்ந்த உள்ளம்—இவற்றைக் காற்றுத்
தேவன் புடைத்து நொறுக்கிவிடுவான்.

சொன்னாலும் கேட்கமாட்டான்.
ஆதலால், மானிடரே வாருங்கள்.
வீடுகளைத் திண்மையுறக் கட்டுவோம்.
கதவுகளை வலிமையுறச் சேர்ப்போம்.
உடலை உறுதி கொள்ளப் பழகுவோம்.
உயிரை வலிமையுற நிறுத்துவோம்.
உள்ளத்தை உறுதி செய்வோம்.
இங்ஙனம் செய்தால், காற்று நமக்குத் தோழனாகி
விடுவான்.

காற்று மெலிய தீயை அவித்துவிடுவான்;
வலிய தீயை வளர்ப்பான்.
அவன் தோழமை நன்று.
அவனை நித்தமும் வாழ்த்துகிறோம்.

□□□

ந. பிச்சமூர்த்தி

## போலி

கண்ணைப் பிடுங்கும்
கலைஞர்களைக் காண்கிறேன்;
கனலை எழுப்பும்
கலைஞர்களைக் காணவில்லை.
எழுத்தைச் சுழற்றும்
மன்னர்களைக் காண்கிறேன்;
எண்ணத்தை மின்னாக்கும்
எளியோரைக் காணவில்லை.
உலகின் திரை தள்ளும்
கடவுளரைக் காண்கின்றேன்;
உயிரை வணங்கும்
உத்தமரைக் காணவில்லை.
தாழை மடல் தேடி
கதம்பத்தைச் சோதித்தால்,
பனங்குருத்தாய் பல்லிளிக்கும்
பயித்தியத்தைக் காண்கின்றேன்.

கண்ணும் கனலும்
எழுத்தும் கருத்தும்
உலகும் உயிரும்
தாழையும் கதம்பமும்
உண்டாக்கியவா!
உண்டாக்கியவா!
பொருளுடன் நிழலேன் படைத்தாய்?
போலிக் குயிரேனளித்தாய்?

□□□

ந. பிச்சமூர்த்தி

# கொக்கு

படிகக் குளத்தோரம்
கொக்கு.
செங்கால் நெடுக்கு.
வெண்பட்டுடம்புக்
குறுக்கு.
முடியில் நீரை நோக்கும்
மஞ்சள் கட்டாரி மூக்கு.

உண்டுண்டு
அழகுக் கண்காட்சிக்குக்
கட்டாயக் கட்டணம்.
சிலவேளை மீனும்
பலவேளை நிழலும்...

வாழ்வும் குளம்
செயலும் கலை
நாமும் கொக்கு.

சிலவேளை மீனழகு
பலவேளை நிழலழகா?
எதுவாயி னென்ன?
தவறாது குளப்பரப்பில்
நம்மழகு—
தெரிவதே போதாதா?

□□□

### கு. ப. ராஜகோபாலன்

## எதற்காக?

பாம்பே, படமெடுத்து நீ என் இப்படி
மகுடிமுன் மெய்மறந்து ஆடுகிறாய்?
பாம்பாட்டிக்கு பிழைப்பளிக்கவா?
இல்லை, இல்லை!
ஆடி யாடி யுன் ஆவலை தீர்த்துக்கொள்ள.

ராதே! குழலோசை கேட்டு நீ
காதல் கொண்டு கானகமெல்லாம் ஏன் ஓடுகிறாய்?
கண்ணனுக்குக் கண்ணோக்கின்ப மளிக்கவா?
இல்லை, இல்லை!
ஓடியோடி யுன் உள்ளப் பூரிப்பை கொட்ட!

பெண்ணே, புருஷனுக்கேன் இப்படிப் பணிந்து
அடிமைபோல இட்டதெலாம் செய்கிறாய்?
'பண்ணு' என்று சொல்லும் புருஷனுக் கஞ்சியா?
இல்லை, இல்லை!
இட்டதைச் செய்துசெய்து உணர்ச்சியை அடக்க!

□□□

வல்லிக்கண்ணன்

## விஷமும் மாற்றும்

வாழ்க்கை விஷம்தானா?
மரணம் அதற்கொரு மாற்றோ?
வாழ்க்கை விஷம்,
மரணமே மாற்றென்று
ஒரு கவிஞன் ஓதுகின்றான்.
சாவு துயிலாமோ?
பிறப்பும் விழிப்பேயோ?
தூங்குவது போலும் சாக்காடு
தூங்கி விழிப்பது போலும் பிறப்பென்று
ஒரு அறிஞன் கூறுகின்றான்.
பிழைக்கிற பிள்ளைக்கு
பிச்சிப்பூ நஞ்சா?
சாகத் துணிந்தவனுக்கு
சமுத்திரம் முழங்கால் மட்டு!
எவனெவனோ
எப்பெப்பவோ
சொன்ன பேச்சுக்கள்தான்!

நஞ்சை உண்டவன்
நெஞ்சை அடைக்குமுன்
கண்டத்தில் நிறுத்தினான் அதை!
கண்டனாகு நீயும்—நீல
கண்டனாக மாறு!
உண்ணும் நஞ்சும் அமுதமாகும்.
மரணம் வந்தபோது
சிறுவன்
அரவணைத்தான் சிவனை.
அரனும்
எட்டி உதைத்ததாலே
செத்துப் போனான் காலன்.
பித்தனாக மாறு—நீயும்
பித்தனாக மாறு!
நஞ்சும் மாறும், மாற்றும் சேரும்.

□□□

'பாரதி அடிச்சுவட்டில்'
வசன கவிதை வளர்க்கும்
'இளவல்' அடிச்சுவட்டிலே--

*நையாண்டி பாரதி*

## காப்பி

காப்பி இனியது. அதில் கலந்துள்ள
எல்லாம் இனிமையுடையது.
காப்பிப் பொடி இனிது. சர்க்கரை
இனியது பால் இனியது.

பால் இனிது—காப்பி நன்று.
பாலும் காப்பியும் சேர்ந்து இனிமையுடைத்து.
அது அமுதம். அது ஜீவசத்து.
உயிரின் இனிப்பு—ஊக்கத்தின் சத்து.
சோர்வுக்கு எமன். தூக்கத்திற்கு
விழிப்பு. விழிப்புக்கு இனிமை.
காப்பி நன்று அது வாழ்க!

காப்பி சுவை உடையது. சோர்வகற்றுவது.
ஆனந்தம் அளிப்பது.
தூக்கம் போக்குவது. ஊக்கம் கொடுப்பது.
துக்கத்தை ஆவியாக மாற்றி ஓடச் செய்வது.
இன்பத்தை கதகதப்பாக தேக நரம்புகளில் கிளுகிளுக்கச்
செய்வது.

காப்பியே அமுதம். அதுவே சொர்க்கம்.
அதுவே சக்தி; அதுவே சிவம்.
காப்பியே காதல் இன்பம். காதல் இனிமையை விடச்
சிறந்தது காப்பி.

அழகியின் வனப்பை விடச் சுவையானது
அவள் பேச்சை விட ரசம் மிக்கது.
அது நன்று. அது இனியது. அது வாழ்க!

காப்பிக்கொட்டை தெய்வம். காப்பிப்பொடி சக்தி.
பால் தெய்வம்; தண்ணீர் சக்தி.
தீ தெய்வம். சர்க்கரையும் அஃதே.
காப்பியே கண்கண்ட தெய்வம்.
அது நன்று. நன்மை பயப்பது.
அது இனியது இன்பம் தருவது.
எங்கும் வியாபித்திருப்பது.
இன்பம் பொங்க ஜீவன் அளிப்பது.
அதை நாம் வாழ்த்துகிறோம்; வணங்குகிறோம்: போற்று
கிறோம்.

காப்பியே விஷம். காப்பியே கஞ்சா.
அது கள். அதுவே சாராயம்.
தளர்ச்சி தருவது; அசதியை வளர்ப்பது.
பலவீனம் கொடுப்பது. வியாதியின் வித்து.
மரணத்தின் 'ஐந்தாம் படை'—
இப்படிச் சொல்வோர் அநேகர்.
எனினும் அவர்களுக்கு ஜீவன் அளிப்பது காப்பி.
அது வேண்டியவர், வேண்டாதவர் இல்லாதது.
'ஜீவன முக்தம்' பெற்ற ஜீவசத்து அது.
ஏழை, பணக்காரன்
சுகவாசி, நோயாளி
ஆண் பெண், தாய் குழந்தை
எல்லாரும் சமம் அதன் முன்னிலே.
ஏழை பங்காளன்; அனாதை ரட்சகன்
பக்தர்களின் பரந்தாமன்; தொண்டரடிப்பொடி.
அது காப்பி.
அதுவே அமுதம். அதுவே வாழ்க!

எல்லா உயிரும் இன்பம் எய்த
குமாஸ்தாக்கள் உழைப்பை மறக்க
உழைப்பாளி களைப்பை நீக்க

எழுத்தாளன் சிந்தனையை ஓட்ட
உதவி ஆசிரியன் உழைப்பில் ஆழ
ஆசிரியர் ஆனந்தம் அனுபவிக்க
இறந்த வீட்டில் வருத்தம் ஓட்ட
பிறந்த வீட்டில் உற்சாகம் பொங்க
கல்யாணத்தில் களிப்புப் பெருக
காடேற்று விசேஷத்தில் கவலை மறக்க
கோடையிலே கொதிப்பை அமுக்க
குளிர்காலத்தில் குளிரைத் துரத்த
விருந்தில் இன்பம் பரப்ப—
இவை காப்பி என்னும் ஒரு பொருளின்
பல உபயோகங்கள்.

காப்பி சர்வ வியாபி. சர்வ வல்லமை பெற்றது.
படைத்தல் காத்தல் அழித்தல்
முத்தொழிலும் புரியும் முதல் மூர்த்தி.

கலையும் பிறவும் படைக்கும்
பூலோக பிரம்மாவுக்கு பூவுலக அமுதம் காப்பி.
பணமற்றோர் பசியைக் கொல்வது காப்பி.
கவலை சோர்வு சோம்பல்

துக்கம் தூக்கம் ஏக்கம்
பற்பல மனிதச் சிறுமைகள்
கொண்டோரை ஆட்கொண்டு அபயமளிப்பது காப்பி.
உறவை வளர்ப்பது. நட்பை காப்பது.
அன்பை அதிகரிக்க செய்வது காப்பி.
அது அமுதம் நவயுக சோமபானம்.
அது இனியது. அது நன்று.
அது வாழ்க!

காப்பியே,
உன்னை நாம் வாழ்த்துகிறோம்;
வணங்குகிறோம்; போற்றுகிறோம்.

நமது உயிரின் உயிர் நீ
நமது சக்தியின் ஜீவன் நீ
ஜீவனின் மூச்சு நீ
இதயத்தின் துடிப்பு நீ
உழைப்புக்கு உணர்வு நீ
உணவு நீ. நீர் நீ. காற்று நீ. கடவுள் நீ
நமக்கு அனைத்தும் நீயே.
காப்பியே. உன் மீது நாம் காதல் கொண்டோம்

பக்தி கொண்டோம் உன்னிடம் ஐக்கியமானோம்.
நீயே நாம், நாமே நீ.
காப்பி இல்லையேல் நாம் இல்லை.
காப்பி வெல்க.

காப்பியே,
என்றும் விளங்குக. என்றும் இன்பம் தருக.
என்றும் வாழ்க. என்றும் வாழ அருள் புரிக.
காப்பியே, அனைத்தையும் காப்பாயாக.
உனக்கு நன்று.
உன்னை உண்போம். உனக்கு உணவாவோம்

அரிசியும் சாதமும்
அவியலும் சாம்பாரும்
யாருக்கு வேணும்
நீ இருந்தால்!
குடித்தால் இனிது. குடிக்கப்படுதலும் இனிது.
நீ தியாகி.
நன்று தருவதற்காக இனிய நீ அழிவுறுகிறாய்.
ஆயின் மறுமலர்ச்சி பெறுகிறாய்.

நீ விஸ்வரூபி. எல்லாம் வல்லவன்
உன் சுவை நன்று. உன் சக்தி நன்று.
நீ நன்று, நன்று, நன்று.

காப்பியே, நீ வாழ்க!
நீ இல்லாவிடில்
நண்பர்கள் பழகும் வகை அறியார்.

விருந்து சுவைக்காது. கல்யாணம்
மணக்காது. இழவு ஒரே சோக
மாகி விடும். ஏழை பசியால்
உண்ணப்படுவான். உழைப்பாளி
களைப்பால் அழிவடைவான்.
குமாஸ்தா எழுதி எழுதிச் சாவான்.
எழுத்தாளன் மூளை வெறிச்சிட்டுப்
போகும். கலைஞன் கனவு சிதைந்து
சித்தவெளி சூன்யமாகி விடும்.
உலகில் தேக்கமும் மந்தமும்
படரும்.

நீ வாழ்க, உலகம் உருப்படுவதற்காக.
நீ உயிர், நீ ஒளி.
நீ இனிமை, நீயே கசப்பு.
நீ விஷம், நீயே அமுதம்.
நீ கொடியை, நீயே இனியை.
நீ தீது, நீ நன்று, நீயே எல்லாம்.
நீ வாழ்க. நம்மை வாழச் செய்க.

□□□

Wrapper Printed at :
Sri Gomathy Achagam, Madras-5.